Registered No. M. 2330

"SIDDHANTHAM"

Vol. 41 —No. 12

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

சுடர் 41	கீலக மார்கழி 1968 டிசம்பர்	இதழ் 12

உள்ளுறை — பக்கம்

சதுரத்தின சங்கிரமம் ... 349

திருவாசகம் ... 354

மயூர வாகன சேவனம் ... 358

சமய ஆராய்ச்சி நிவந்தம் ... 361

நரியும் பரியும் ... 365

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

திருமுக்கால் விளக்கம்

(நல். முருகேச முதலியார்)

சமீபத்தில் "சித்தாந்தம்" பத்திரிகையில சம்பந்தர் தேவார யாப்புகளில் ஒன்றாய திருமுக்கால் என்பதைப் பற்றி ஒரு குறிப்பு எழுதப்பட்டிருந்தது. திருமுக்கால் யாப்பமைதியோ அல்லது பண்வகையோ என்ற ஐயப்பாடு எழுந்தது.

திருமுக்கால் யாப்பமைதி என்பது திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் (ஸ்ரீ சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள்) தம் திருத்தொண்டர் புராண உரையில் எழுதியுள்ளதினின்றும் தெளிவடைகிறது. திருமுதுகுன்றப் பதிகம் திருமுக்கால்—சாதாரிப்பண் "முரசதிர்ந் தெழுதரு முதுகுன்ற மேவிய" என்ற பதிகத்துக்கு விளக்கம் எழுதுகையில் அப்பெரியார் பின் வருமாறு கூறியுள்ளார்.

"திருமுக்கால் என்பது பாட்டின் யாப்பமைதி. பாட்டுத்தோறும் "பரசமர் படையுடையீர்" என்பது போன்ற இரண்டாவதடி மீண்டும் மூன்றாவது அடியினுள் "பரசமர் படையுடை யீருமைப் பரவுவார்" என்பது போன்று விரவி உட்புகுந்து விடுதலால், இப்பாட்டுக்கள் விருத்தங்கள்போல் நான்கடி பெறாது மூன்றடியால் நடப்பன என்பது உட்கோளாக முக்கால் எனப்பட்டது".

(Vol IV. பக்கம் 217-18).

சமாஜப் பொதுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாச அலுவலகத்தில் 21-12-68 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாச ஆண்டு அறிக்கையையும் இவ்வாண்டு வரவு செலவுக் கணக்குகளையும் ஒப்புக்கொள்ள சமாசப் பொதுக் கூட்டம் நிகழும். அக்கூட்டத்திற்கு உறுப்பினர் நிறைவெண் இல்லாவிட்டால் மேற்குறித்த பொருள்கள் பற்றி ஒப்புக் கொள்ள அவ்விடத்திலேயே மறுநாள் 22-12-68 ஞாயிற்றுக்கிழமை காலை அதே நேரத்தில் சமாச விதிகளின் படி வருபவர்களைக் கொண்டு அக்கூட்டம் நடத்தப்பெறும். பொது உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம் - 1905 — பதிவு - 1915)

63ஆம் ஆண்டு விழா, திருமயிலாப்பூர்

அழைப்பும் அறிவிப்பும்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

கல்லாடை புனைந்தருளுங் காபாலியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

அன்புடையீர் !

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் **63 - ஆம்** ஆண்டு நிறைவுவிழாவும், பொதுக்கூட்டமும், அதன் அங்கமாகச் சைவர், சைவமங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும், *27, 28, 29-12-68* ஆகிய வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், திருமயிலாப்பூர் கற்பகாம்பாள் கபாலீச்சுரர் திருக்கல்யாண மண்டபத்தில் பிற்காணும் நிகழ்ச்சி நிரலில் கண்டாங்கு முறைப்படி நிகழும்.

திருவாசகமணி - உயர்திரு. கெ. எய். பால **சுப்பிரமணியம்**, பி. ஏ., பி. எல்., அவர்கள் சைவர் மாநாட்டிற்கும், டாக்டர் திருமதி. தாரா நடராஜன், எம். பி., பி. எஸ். அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டிற்கும், உயர்திரு. கெ. இ. அருணுசல முதலியார், எம். ஏ., பி. காம். அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்கும தலைமைவகிப்பார்கள்.

சித்தாந்த சைவம்பற்றி அறிஞர்கள் பலர் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள். இடை இடையே மாநாட்டு நிகழ்ச்சிகளின்போது திருமுறை ஓதப்பெறும்.

அன்பர்கள் அனைவரும் உறுப்பினரும் வந்து கேட்டு விழாவைச் சிறப்பிக்க வேண்டுகின்ருேம்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்குச் சமாஜ உறுப்பினர்கள் அனைவரும் வருமாறு வேண்டுகின்ருேம்.

இங்ஙனம்

சமாஜத்தினர் :

தலைவர் : வித்துவான் - கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ. எ. எஸ். (ஓய்வு).

துணைத்தலைவர்கள் :

பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம். ஏ., எல். டி.
சு. வரதராச பிள்ளை, பி. எ.

செயலாளர் : மு. நாராயணசாமி முதலியார்.

வரவேற்புக் குழுவினர் :

தலைவர் : அய்யா. சுப்பிரமணிய முதலியார்

துணைத்தலைவர்கள் :

அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

கே. இ. அருணுசலம், எம். ஏ., பி. காம்.

ஆர். மாசிலாமணி முதலியார், மேயர் கம்பெனி.

செயலாளர் - பொருளாளர் :

P. M. நாயஞர், டி. காம்.

ஏனைய உறுப்பினர் :

'பத்ம பூஷண்' - டி. எஸ். இராமசாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

கே. கமலக்கண்ண முதலியார்

பம்மல் - ச. வரதராஜ முதலியார்

ப. சை. அண்ணுமலை முதலியார்

பி. ஜி. நடராஜ முதலியார், ஜெ. பி.

இரத்தினவேலு செட்டியார்

தட்சிணுமூர்த்தி நாயக்கர்

அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.

விசுவநாத குருக்கள்

ச. நடேச முதலியார்

எஸ். சுந்தரம்

எம். சிவராமன், பி. ஏ.

ஆ. கன்னியப்பன்

நிகழ்ச்சி நிரல்

(27—12—'68) வெள்ளிக்கிழமை

காலை 8 மணி: கபாலீச்சுரர் கற்பகாம்பாள் வழிபாடும் ஊர்வலமும்.

காலை 9 முதல் 1 மணி வரை - **சைவர் மாநாடு**

இறைவணக்கம்.

கொடியேற்றம்: திரு. ஆ. இராதாகிருஷ்ணன், எம். ஏ., பி. எல்., இந்து சமய அறநிலைய ஆணையாளர்.

வாழ்த்துரை:

சைவப் பெரியார் - திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

பத்ம பூஷணம் - திரு. டி. எஸ். இராமசுவாமி ஐயர் பி. ஏ., பி. எல்.

வரவேற்புரை: திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார்.

திறப்புரை: தவத்திரு. குன்றக்குடி அடிகளார்.

படத்திறப்பு: அருள்திரு. ஞானியார் அடிகளார் திருவுருவப் படம் - ராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், பி. ஏ.

" அருள்திரு. மறைமலையடிகள் திருவுருவப் படம் - திரு. தி. சி. இராமலிங்கம், எம். ஏ., பி. எல்., அரசுச் செயலாளர், சட்டத்துறை.

ஆண்டு அறிக்கை: திரு. க. வடிவேலாயுதம், எம். ஏ.

வாழ்த்துச்செய்திகள் படித்தல்: திரு. கொ. நீ. சிங்கார வேலு, எம். ஏ.

தலைமையுரை: திருவாசகமணி - கெ. எம். பாலசுப்பிரமணியம்.

மாலை 4 முதல் 8 மணி வரை - **சைவர் மாநாடு**

இறைவணக்கம். தலைவர் முன்னுரை.

மலர்வெளியீடு : மாண்புமிகு திரு. ஆர். சதாசிவம், பி.ஏ., பி. எல்., உயர் மன்ற நீதிபதி.

நூல்வெளியீடு : "திருவாசகம்" - திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.

" " Gospel of Saivism " - M. Shyamdas, Chief Presidency Magistrate.

சொற்பொழிவுகள் :

1. திரு. பெ. திருஞானசம்பந்தம், எம். ஏ., எல். டி. —Sources of Saivism.
2. டாக்டர் - திரு. வ. ஆ. தேவசேனபதி, எம். ஏ., பி. எச்டி. —Contribution of Saiva Siddhanta to Indian heritage
3. அகிலன் —அறநெறியும் நடைமுறையும்
4. அர்ச்சுனன், பி. ஏ., செயலாளர், தமிழ்நாடு தெய்வீகப் பேரவை. —சைவ சித்தாந்தத் தத்துவ விளக்கம்

தலைவர் முடிவுரை, வாழ்த்து.

(28—12—'68) சனிக்கிழமை

காலை 8 மணி : திருக்கோயில் வழிபாடும், ஊர்வலமும்.

காலை 9 முதல் 1 மணி வரை - **சைவ மங்கையர் மாநாடு**

இறைவணக்கம்.

வாழ்த்துரை : திருமதி. கு. திரிபுரசுந்தரி அம்மையார் (மறைமலையடிகளார் திருமகளார்)

தலைமையுரை : டாக்டர் - தாரா நடராசன் அம்மையார், எம். பி., பி. எஸ்.

சொற்பொழிவுகள் :

1. திருமதி. சாரதாம்பாள் நம்பியாரூரன், எம். ஏ.
—கண்ணப்பர் கனிவு

2. திருமதி. புனிதவதி இளங்கோவன், எம். ஏ.
—தொண்டுக்குத் தொண்டு

3. திருமதி. ஜயகுமாரி பாஸ்கரன்
—திருவள்ளுவரும் திருத்தொண்டரும்

பிற்பகல் 2-30 முதல் 4-30 மணி வரை

இடம் : கல்யாண மண்டபம், எண் 16, தெற்கு மாடவீதி.

சமாஜ உறுப்பினர் ஆண்டுப் பொதுக்கூட்டம், சமாஜ அலுவலர்கள் தேர்வு முதலியன.

மாலை 5 முதல் 8 மணி வரை - சைவர் மாநாடு

இறைவணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள் :

1. பேராசிரியர் - வித்துவான்-பாலூர் - கண்ணப்ப முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்.
—சேக்கிழார் ஒரு பல்கலைக் குரிசில்

2. பேராசிரியர் - அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம். லிட்.
—மரணமிலாப் பெருவாழ்வு

3. திரு. மு. அருணசலம், எம். ஏ., ஆசிரியர் "சித்தாந்தம்"
—சிவ ஆகமங்கள்

தலைவர் முடிவுரை, வாழ்த்து.

இரவு 8 முதல் 9-30 மணி வரை

நாடகக் கலைநிகழ்ச்சி: "அங்கம் பூம்பாவை" - திரு. எஸ். வி. சிட்டிபாபு, எம். ஏ., எல். டி., (இணை இயக்குநர், கல்வித்துறை) தலைமையில் கபாலீச்சுரர் தேவார பாடசாலை மாணவர்களால் நடத்தப்பெறும்.

(29—12—'68) ஞாயிற்றுக்கிழமை

காலை 8 மணி: திருக்கோயில் வழிபாடும் ஊர்வலமும்.

காலை 9 முதல் 1 மணிவரை - **சைவ இளைஞர் மாநாடு**

இறைவணக்கம்.

வாழ்த்துரை: திரு. கீ. இராமலிங்கனார், எம். ஏ.

திறப்புரை: பத்மபூஷண் - பெரியசாமி தூரன்

தலைமையுரை: திரு. கே. இ. அருணாசலம், எம். ஏ., பி.காம்.

சொற்பொழிவுகள்:

1. திரு. வெ. தெ. துரைராஜ், ஐ. ஏ. எஸ்.
   —சிவநெறி
2. திரு. சு. மாரிமுத்து, பி. ஏ.
   —சைவ சமயமே சமயம்
3. சைவச்செங்கதிர் - வித்துவான்-இராச செல்வக் கணபதி.
   —ஒரு பெரும் நெறி
4. ஔவை து. நடராஜன், எம். ஏ., எம். லிட்.
   —திருவள்ளுவப் பயன்

பிற்பகல் 2-30 முதல் 4-30 வரை - **யோகப் பயிற்சி**

இடம்: கல்யாணமண்டபம், எண் *16*, தெற்கு மாட வீதி,

நிகழ்த்துபவர்: சிவயோகி இரத்தினசபாபதி பிள்ளை, திருவாரூர்

மாலை 5 முதல் 8 மணிவரை - சைவர் மாநாடு

இறைவணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள் :

1. திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம். ஓ. எல்., ஆசிரியர், "திருக்கோயில்."

—திருஞானசம்பந்தரின் சிறப்பியல்புகள்

2. வித்துவான் - க. வெள்ளைவாரணனர், அண்ணமலை நகர்.

—இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும்

3. சித்தாந்தக் கலைச்செல்வர் - திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி., காஞ்சிபுரம்.

—உண்மை விளக்கம்

தலைவர் முடிவுரை.

நன்றியுரை : வித்துவான் – திரு. அம்பை சங்கரன்.

வாழ்த்து

குறிப்பு :—(1) மாநாட்டில் சமாஜ வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும். சமாஜ உறுப்பினர் கட்டணமும், ஆங்கில முத்திங்கள் இதழ் கட்டணமும் மாநாட்டில் செலுத்தலாம். (2) சமாஜ உறுப்பினர்களுக்கு உண்டி, உறையுள் வசதிகள் செய்து தரப்பெறும். முன்னரே தங்கள் வரவினை சமாஜச் செயலாளருக்குத் தெரிவிக்கவும். சமாஜ உறுப்பினரல்லாதார் உணவுவசதி தேவையானல் ரூ. 10/- செலுத்த வேண்டும்.

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41 | கிலக ஹு மார்கழி 1968 டிசம்பர் | இதழ் 12

சதரத்தின சங்கிரகம்

ஆசிரியர்

சந்தான ஆசாரியருள் நான்காமவர் உமாபதி சிவாசாரியர். இவர் தில்லை வாழந்தணருள் ஒருவர். நடராசப் பெருமானைப் பூசை செய்யும் மரபினராதலால், வடமொழி ஆகமங்களுள் ஒன்ருகிய பௌஷ்கராகமத்துக்கு இவர் விரிந்த வியாக்கியானம் செய்ததாக வரலாறு உண்டு இவ்வியாக்கியானம் 1925ல் சிதம்பரம் அம்பலவாண நாவலரால் கிரந்த எழுத்தில் நன்கு அச்சிடப்பட்டுள்ளது.

இவ்வுரையன்றி, இவரே ஆகமங்களிலிருந்து 100 பாடல்களைத் திரட்டி அவற்றுக்கு விரிவுரையொன்றும் எழுதினுர். சுவாயம்புவம், நிச்சுவாசமி மதங்கம், தேவ்யா மதம், கிரணம், பராக்கியம், விசுவசாரம், மிருகேந்திரம், தேவி காலோத்தரம். ஞானோத்தரம் ஆகிய ஆகமங்கள், உபாகமங்களின் பாடல்கள் இங்குக் காணப்படுகின்றன.

உரையின் அவதாரிகையில் உமாபதி சிவாசாரியார் பின் வருமாறு கூறுகிருர்:

சிதம்பரே கலுப்தமட: சிவஸ்ரீ
ருமாபதிர் நாம சிவாக மக்ஞ: |

ச்வயம்பு நிச்வாச மதங்க தேவ்யா
மதம் மிருகேந்திரம் கிரணம்பராக்கியம் ||
ஸ்ரீதேவி காலோத்தர விச்வ சாரம்
ஞானோத்தரம் வீக்ஷ்ய தசாபி சைகம் |
சாராணி சூத்ராணி சதம் க்ருஹித்வா
சகார பந்தம் சதரத்ந ரூபம் ||

உரைக்குச் 'சதரத்தின உல்லேகினி' என்று இவர் பெயரிட்டார். உல்லேகினி என்றால் பட்டை தீட்டுதல் என்பது கருத்தாகும். 100 இரத்தினங்களையும் இவ்வுரை கடைந்து பட்டை தீட்டி முன்னிலும் பன்மடங்கு பிரகாசிக்கச் செய்கிறது என்பது கருத்தாகும். சாக்த தந்திரங்களில் மிகவும் வல்லவராயிருந்த சர் ஜான் உட்ராப் (ஆர்தர் அவலான்) வெளியிட்ட தந்திர நூல் வரிசையில் 22 ஆவது நூலாக பஞ்சானன சாஸ்திரியாரால் கல்கத்தாவில் இந்நூல் 1943–இல் மிகவும் அழகாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சைவ ஆசாரியரான உமாபதியார் செய்த இவ்வாகமத் திரட்டு நூல் பற்றிய வரலாறு எக்காரணத்தாலோ தமிழ் நாட்டில் வழங்கவில்லை. இது சைவர்களுக்கு மிகவும் முக்கியமான நூலென்பது சொல்லாமலே அமையும். ஆகமங்களின் திரட்டு, உமாபதி திரட்டியது என்றால் இதன் சிறப்பிற்கு வேறு சொல்லவேண்டியதில்லை. இது பொதுவாக ஞானத்தையும் தீட்சையையுமே சொல்கிறது. இப்போது இந்நூல் சமாஜத்தின் சைவ சித்தாந்தம்–ஆங்கில இதழில், பேராசிரியர் பொ. திருஞானசம்பந்தம் அவர்களின் விளக்கத்தோடு வெளிவந்துகொண்டிருக்கிறது.

இதுபற்றித் தமிழில் வரலாறு இல்லாது போயினும், மூன்று குறிப்புகள் கிடைக்கின்றன. இவற்றுள் காலத்தால் முந்திய முதலாவது குறிப்பு மதுரைச் சிவப்பிரகாசர் கி. பி. 1488 இல் எழுதியது ஆகும். அவருடைய சிவப்பிரகாச விரிவுரையில் 29, 69 ஆகிய இரு பாடல்களின் உரையில் சதரத்தின சங்கிரகத்தைக் குறிப்பிடுகிறார். ஆனால் அவ்விரண்டிடத்திலும் அச்சுப் பதிப்புகளில் நூற்பெயர் சதரத்தின சங்கிரக

மென்று தெரிந்து குறிப்பிடப்பெறவில்லை. கொ. சண்முக சுந்தர முதலியாருடைய இரண்டாம் மதிப்பு (1896), "சதிர்த்தின சங்கிரகம்", "சதுர்த்த சங்கிரகம்" என்று குறிப்பிடுகிறது. இப் பதிப்பைப் பார்த்து அச்சிட்ட சமாஜப் பதிப்பும் (1940) அப்படியே குறிப்பிடுகிறது: அக்காலத்தில் சதரத்தின சங்கிரகம் என்ற பெயருடைய உமாபதியார் தொகுத்த ஆகம நூல் ஒன்று இருந்தது என்பது தெரியவில்லை. ஏட்டில் சதிர்த்தின சங்கிரகம் சதரத்தின சங்கிரகம் என்ற இரண்டுக்கும் 'த' மேலுள்ளகொம்பு ஒன்றே வேறுபாடு (த—தி).

மதுரைச் சிவப்பிரகாசர் இந்நூலைக் குறிப்பிடும் முதல் இடத்தில் பின் வருமாறு எழுதுகிறார் "அன்றியும் இங்ஙனங் கூறி வந்த மூவகைத் துக்கஞ் சிவாகமத்தில் கிரந்தத்திலே யெடுத்து சதரத்தின் சங்கிரகத்திலே சேர்ந்த கிரந்தத்தினுங் கண்டு கொள்க, அந்த கிரந்தத்தின் அத்தமும் முற்கூறிய ஞானமிர்தத்தின் அத்தமும் ஒப்புநோக்கிக் கண்டு கொள்க"

மதுரைச் சிவப்பிரகாசர் இவ்வாறு கூறியதிலிருந்து சதரத்தின சங்கிரகமானது, "சிவாகமங்களிலிருந்து எடுத்துச் சேர்த்த ஒரு கிரந்தம்" என்பது தெளிவாகிறது. மூவகைத் துக்கம் என்று இவர் இங்குக் கூறியதற்கு ஆதாரமான சிவாகம வசனம் பின்வருவது. (சதரத்தின சங்கிரகம் 30, விசுவசாரோத்தரம்):

தர்மாதர்மாத்மகம் கர்ம தச்ச த்ரிவிதம் அர்த்தத:
ஜாத்யாயுர் போகதம் யேந நாமிச்ரம் பச்யதேக்வசித் |

கர்மமானது தர்ம அதர்ம வடிவாயிருக்கும் அதுவும் மூவிதமானது; சாதி, ஆயு, போகம் என கர்மத் தொடர்பில்லாதது எதுவுமில்லை. இதற்கு நேரான சதமணி மாலைச் செய்யுள் பின் வருவது (31)! இதுபற்றி அடுத்துக் கூறுவோம்:

பரக்கும் புண்ணிய பாவ வடிவாய்
இருக்கும் கன்மம்; இதுமுத் திறத்ததாம்;

தரிக்கும் சாதியோடு ஆயுள் நுகர்வென
உரைக்கும் கன்மம் கூறுஇடம் இல்லையே.

மதுரைச் சிவப்பிரகாசர், 'கன்ம நெறி திரிவிதம் நற்சாதி ஆயுப் போகக் கடனதென வரும் மூன்றும்' என்ற சிவப்பிரகாசத்தொடரை விளக்குமிடத்து, மேற்காட்டியபடி சதரத்தின சங்கிரகத்தைக் குறிப்பிடுகிறார்

அடுத்தது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் செய்த மொழி பெயர்ப்பு இது சதமணிமாலை என்று பெயருடையது. விருத்தப்பாக்கள் 100 உடையதாயினும், பாயிரம் போன்றன நீக்கி 96 பாடல்கள். ஆகமப் பாடல்மொழி பெயர்ப்பு. இவை முறையாகச் சதரத்தின சங்கிரகத்தின் மொழி பெயர்ப்பாக அமைந்துள்ளன 1944இல் மயிலம் மடத்தார் வெளியிட்ட சிவப்பிரகாசர் நூல் தொகுப்பில் 10 ஆவது நூலாக இது அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் இது உமாபதி செய்த திரட்டின் மொழிபெயர்ப்பென்று அங்குக் கூறவில்லை: காரணம் முற்கூறியபடி இச்செய்தி தெரிய வாராமையே.

இனி மூன்றாவது குறிப்பு தருமபுரம் மடத்தார் வெளியிட்ட சம்பிரதாய தீபம் என்ற நூலில் காணப்படுகிறது. இந்நூலில் 244 பாடல்கள் உள்ளன. இந்நூல் சிவானந்த முனிவர் செய்ததாகச் சொல்லப்படுகிறது. நூலின் ஏடுகள் முன் பின் மாறிப் பல விதமாகக் கோக்கப்பட்டிருப்பதால், நூலின் அமைப்பு திருத்தமானதென்று சொல்வதற்கில்லை. சிவானந்த முனிவர் என்ற பெயர், முதல் பதிப்பை அச்சிட்ட (1928) முத்துத் தாண்டவராயப்பிள்ளை புதிதாய்ப் படைத்துக் கொண்ட பெயர்போலும். 140 ஆம் பாடலில்,

தேக்குபர மானந்தத் தெள்ளமுதங் காட்டியெங்கும்
நீக்கமற வைப்பான் நீயென்று—காக்குஞ்
சிவானந்த மாமுனிக்குச் செவ்வேள் உரைத்தது
அவாவுடனே நன்றாய் அறி.

எனக் காண்கிறோம். முதல் இரு வரிகளும் குமரகுருபரர் பாடிய கந்தர் கலி வெண்பாவில் உள்ளன. இங்குச் சுட்டிய சிவானந்த மாமுனிவர் அவரே ஆவார். ஆதலாலும் இதன் முன் இரு பாடல்களில் (138, 139) அக்கலிவெண்பாக்கண்ணிகள் நான்கை இந்நூல் அப்படியே கூறுதலாலும் இது குமரகுருபரர் காலத்துக்குப் பிந்தியது என்பது தெளிவு. இனி இச்சிவானந்த முனிவர் (சம்பிரதாய தீப ஆசிரியர்) சிவஞான தேசிகர் என்பர். தேசிகர் காலம் 1740. அவருக்குப் பின் ஐந்து ஆறும் பட்டங்களிலிருந்த மாசிலாமணி தேசிகர் சச்சிதானந்த தேசிகர் என்ற இருவரை இந்நூற் பாடல் (154) குறிப்பிடுகிறது. ஆதலால் சுமார் கி. பி. 1800 இல் தோன்றியதென்று கருதுதல் பொருந்தும்.

சம்பிரதாய தீப ஆசிரியர் தாம் கொண்ட பிரமாண நூல்களைக் குறிப்பிடுகிறார். (76, 77)

வந்தஅனு மானவுப மான அளவைக்கிங்கு
எந்தநூல் முன்னா லியம்புவாய்—மைந்தா
சிவநெறிப்ர காசஞ் சிவப்பிர காசந்
தவர்புகழ்ஞா னாமிருதந் தாம்.

தத்துவப்ர காசஞ் சதரேற்றின் சங்கிரகம்
முத்தர்பாற் கேள்வி முறைத்திரட்டுச்—சித்திமுதற்
பன்னூலின் உண்மை பகர்ந்தான் குருஅவைகள்
இந்நூலிற் சொன்னோம் எடுத்து,

இரண்டாம் பாடலில் ''சதரேற்றின் சங்கிரகம்'' என்பது விளக்கமில்லாமல் உள்ளது. ஏட்டில் எகர ஏகார வேறுபாடு இருக்காது. எழுதுவோர் பலர், தகரத்துக்கு றகரம் எழுதியிருப்பதுமுண்டு. இதைக்கொண்டு பார்க்கும்போது இத்தொடர் 'சதரெத்தின சங்கிரகம் என்றே கொள்ளத் தக்கது, இவ்வாறு கொள்ளும்போது இதன் பொருளும் பொருத்தமும் விளக்கமாயுள்ளன. இச்சதரத்தின சங்கிரகம் ஆகம நூல் திரட்டு ஆதலால் பிரமாண நூல் என்பதில் தடையில்லை. சம்பிரதாய தீபத்தை இரண்டாம்முறை அச்சிட்டோர் (1956) இத்தொடரின் வடிவம் அறியாமல் 'சதுர்வேத சங்கிரகம்' என்று திருத்தி அச்சிட்டார். மேலே காட்டியவற்றால் இத்

திருத்தம் சரியன்று என்பதும், நூற்பெயரின் சரியான வடிவம் 'சதரத்தின சங்கிரகமே' என்பதும் தெளிவாகும். இதனுல் நாம் பெறுவது, சமய வாழ்வுடையோர் சிலரேனும் தமிழ்நாட்டில் இந்நூலைப் பயின்ருர்கள் என்பதாகும்.

உமாபதி சிவாசாரியர் தேவாரப் பாடல்களிலிருந்து 99 பாசுரங்களைத் திரட்டித் திருமுறைத் திரட்டு என்று பெயர் தந்து தமது திருவருட்பயன் அதிகாரத் தலைப்புகளுக்கு ஏற்பத் தலைப்புத்தந்து ஒரு தொகுப்பு அமைத்தார் என்பது அனைவரும் அறிந்த செய்தி. இத்திருமுறைத் திரட்டு பல முறை அச்சாகியுள்ளது.

திருவாசகம்

(அருள்திரு. ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்)

"சித்தாந்தம்" மலர் 41, இதழ் 11-ல் எழுதப்பெற்றுள்ள 'ஆசிரியர் குறிப்புக்கள்' திருவாசகம் சுத்தபதிப்பு விரைவில் வெளிவர இருப்பது பற்றியும் ஆராய்ச்சிக்குரிய சில செய்திகள் பற்றியும் குறிக்கின்றன. அவை எம்போன்ற பலர்க்கும் உவகை தருகின்றன. எனவே திருவாசகம், சுத்தப் பதிப்புக்கு நாம் கவனத்தில் கொள்ளத்தக்க சில இக்கட்டுரையில் தரப்பெறுகின்றன.

காரைக்குடி ராய. சொக்கலிங்கனர் போன்ற பலர் இன்றைய யாப்பிலக்கண வரலாறும் கட்டளைத் தமிழ் மரபும் பல வகையில் முரண்படும் என்பதை நோக்காமல் திருத்தம் செய்யத் துணிவது பொதுவாக இன்று தமிழ் உலகில் காணப்படும் போக்கை நமக்கு இனிதுணர்த்தும்.

'அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரியாய்'

என்ற பகுதியை 'அடியார் நடுவுள்ளே இருக்கும் அருளைப் புரிபொன்' என்று மாற்றுவது பலவகையில் குறைபாடுடையதே.

(1) 'நடுவுள் இருக்கும்' என்பதை 'நடுவுள்ளே இருக்கும்' என்று ஏகாரம் சேர்த்தது ஓசையும் பொருளும் ஒவ்வாத திருத்தம்.

(2) அத்தகையதே 'அருளைப் புரியாய்' என்பதை 'அருளைப் புரிபொன்' என்றதுமாகும்.

(3) உள் என்பதும் உள்ளே என்பதும் ஒன்றுபோல் தோன்றல் ஏமாற்றமே. ஏகாரம் என்ன பொருளில் வந்தது என எண்ணாமல் அதனைச் சேர்த்தது தவறே.

(4) புரியாய் என்பதும் புரி என்பதும் ஒன்றல்ல; இருவேறு இலக்கண அமைதியும் பொருளும் தருவன அவை. மூத்த திருப்பதிகத்தில் மிகச் சிறந்த ஒரு செய்யுளை இவ்வாறு மனம்போனபடி எல்லாம் மாற்றி அச்சிடுவது அஞ்சத்தக்கதற்கு அஞ்சாமை என்பது குறிப்பிடத்தக்கது.

(5) விருத்தமெனும் 'ஒண்பா'வில் சீர் எல்லாம் நிரலே ஒத்தமைதல் வேண்டும். 'அசையும் சீரும்' இசையொடு சேர்த்தி வகுத்தனர் காட்டலே' கட்டளைத் தமிழ் மரபு. 'மரபு நிலையில் திரியில் பிறிது பிறிதாகும்' என்பது கட்டளைத் தமிழ்க் களஞ்சியமாம் தொல்காப்பியர் ஆணை என்பதைத் தமிழ் அறிந்தோர் அனைவரும் நன்குணர்வர்.

நான்காம் பாடல் கட்டளைக் கலித்துறையாக அமைந்தது. இப்பாடலுக்கு மட்டும் யாப்பமைதி வேறுபாடுடையதாக ஓசையாலும் அமைவது ஒரு உண்மையை நாம் உணரத் தகும என்பதில் சிறிதும் ஐயமில்லை. அடைக்கலப் பத்துக் கலவைப் பாட்டாகத் தோன்றற்கும் வேறு பல மூரண்பாடு

களுக்கும் அவ்வுண்மை தெளிவுதர வல்லதாகும். அதனை மட்டும் இக்கட்டுரையில் குறித்து விளக்கலாம் என்பதே இக்கட்டுரை நோக்கம்.

யாப்புக்காக மாணிக்கவாசகர் காத்திருக்கவில்லை என்பது உண்மையாயினும் கட்டளைத் தமிழ் யாப்பு அவர் உள்ளத்திலிருந்து என்றும் நீங்கியதில்லை; நீங்கவும் இயலாது. தொல்காப்பியர் செய்யுளியலுக்கு முற்றும் பொருந்திய தமிழ் மரபு அவர் உளத்தவிசிலிருந்து என்றும் நீங்காத ஆண்டா மணிவிளக்காகும்.

வேறு எப்படி இத்தகைய முரண்பாடுகள் தோன்றின? அதுதான் வரலாற்றுத் திருவிளையாடல். அது என்ன என இனி நோக்குவோம்.

''தேனூறும் வாசகங்கள்
அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற
மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர்
மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை
இருபோதும் இறைஞ்சுவனே''

என்பது செவ்வந்திப் புராணச் செய்யுள். ஆனால், திருவாசகச் செய்யுள் தொகை பதிப்புக்கு ஒருவகையாக மாறுகின்றது.

1959-ல் வெளிவந்த திருப்பனந்தாள் வெளியீடு 51 பதிகப் பாடல்தொகை 658 என்று குறித்துள்ளது. வேறு சில பதிப்புகளிலிருந்து எடுத்துச் சேர்த்த எட்டுப் பாடல்களும் பதிக்கப் பெற்றுள்ளன, ஆக 666 பாடல்கள் உள்ளன.

அச்சோப்பதிகம் பதிகம் பதிகமாக 10 பாடல் கொள்ளவேண்டின் 'செத்திடமும்' என்று தொடங்கும் பாடல் சேர்க்கப் பெறலாம்; பிற இரண்டு மிகை என நன்குணரலாம்.

இவ்வாறே 66 பாடல்கள் சேர்க்கப் பெற்றிருக்க வேண்டும். இனி சமாஜம் பாடல்களை ஒதுக்க இவ்வுண்மை ஒருவாறு உறுதி பெற வகை ஏற்பட்டுச் சுத்தப் பதிப்பு உருவாக வழி பிறக்கும் என நம்புகிறோம். கருத்து முரண்படும் பாடல்களும் கூர்ந்துணர்ந்து ஒதுக்கத்தக்கவையே.

"அகவலுடன் பாட்டறு நூற்றைம்பத்தாறே" என்கிறது திருவாசகப் பதிகத் தொகைப்பாடல். அதற்கு அடிக்குறிப்பு திருப்பூவல்லியில் 20-வது பாடலும் திருவுந்தியாரில் 20-வது பாடலும் நீக்கிப் பார்த்தால் 656 வரும் என்று கூறுகிறது. ஏன் நீக்கிப் பார்க்க வேண்டும் என்று விளக்கம் தரவில்லை.

(1) இசை வேறுபாடு

(2) பொருள் முரண்

(3) யாப்பு முரண்

(4) பதிக அளவு முதலிய பலவும் நோக்கியே முடிவு செய்ய வேண்டும். அவ்வப்போது கிடைப்பதையும் சேர்த்துக்கொண்டே போவது தூய பதிப்பாக அமைய இடந்தராது. சென்ற ஆண்டு வடலூரில் ஒருவர் பத்துப் பாட்டு அச்சிட்டு அவை திருவாசகப் பாட்டு என்றும், சித்தாந்திகள் வேண்டும் என்று ஒதுக்கியவை என்றும் குறித்திருந்த வெளியீடு ஒன்று எமக்குக் கிடைத்தது. அது திருவாசக நடைக்கும் பொருளுக்கும் முற்றும் முரண்பட்டிருந்தது. இத்தகைய போக்கறுபனுவலாக நம்

திருவாசகத்தேன் வெளிவர வேண்டும் என எல்லாம் வல்லானை ஏத்துவோம். 'எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே எல்லாம் வல்லான் தனையேயேத்து' என்பர் வான்கலந்த மாணிக்க வாசகத்தில் ஊறி ஒளியுடம்பு பெற்ற வள்ளல் பெருமான்.

சிற்றம்பல க்கோவைத் தேன்சொரியும் செம்மலே
மற்றொப்பி லாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்கும் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே;

என்கிறது திருவெண்காட்டுப் புராணம். வாழ்க மணிவாசகம்! வளர்க கட்டளைத் தமிழ் மரபு!

மயூர வாகன சேவனம்

ந. செயராமனார்

செவ்வேட் பரமனும் ஸ்ரீ முருகப் பெருமானையே தெய்வமாகக் கொண்டொழுகி அப்பெருமான்மீது தோத்திரமாக 6666 பாக்களும் உரைநடையில் சாத்திரமாகப் பல நூல்களும் அருளிய பாம்பன் ஸ்ரீமத் குமாரகுரு தாச சுவாமிகள் (1850–1929) எனும் பெயரிய தவச்சீலர் 1895 முதல் 1929 வரை தமது துறவு நிலையில் சென்னையில் வதிந்து வந்தார். அவர் அக்கால் சென்னையிலும் மற்றும் தென்னாட்டிலும் சைவத்தில் திளைத்த பேரன்பர்கள் மனத்தில் பயபக்தியோடு கொண்டாடப் பெறும் நிலையில் நிறைந்திருந்தார்.

சாலிவாகன சகம் 1846 மார்கழி மாதம் 12 ஆம் நாள் (27-12-1923) வியாழக் கிழமையன்று நண்பகலில் ஸ்ரீமத் சுவாமிகள் தம்பு செட்டித் தெரு வழியாக நடந்துவந்து கொண்டிருக்கையில் ஒரு குதிரைவண்டி சுவாமிகளது திரு

மேனியைத் தாக்கி வீழ்த்தி அவர்களின் இடது கணைக்காலி லேறி எலும்பை முறித்துவிட்டது. பேயும் இரங்கும் வண்ணம் ஸ்ரீமத் சுவாமிகளது காலில் இரத்தம் ஒழுகியது. அவணிருந்தோர் ஸ்ரீமத் சுவாமிகளைச் சென்னைப் பெரிய மருத்துவ மனையில் (General Hospital Munroe Ward-Bed No. 11) சேர்த்தார்கள். உரிய சிகிச்சை நடைபெற்றது.

ஆன்மிகப் பெருமக்கள் அனைவரும் திரள் திரளாக வந்து ஸ்ரீமத் சுவாமிகளைக் கண்ணுற்று ஆற்றொணாத் துயரடைந்து பலவாறு புலம்பி யழுதனர். ஸ்ரீமத் சுவாமிகளுக்கு அவ்வமயம் வயது எழுபதுக்கு மேலிருக்கும். மேலும் இளம் வயது முதல் உப்பு, புளி நீக்கிய உணவையே சுவாமிகள் அருந்தி வந்தார்கள். அதனால் முறிந்த கால் கூடுவதற்குச் சாத்தியமில்லை எனவும் காலைத் துண்டித்து எடுத்துவிடுவதே மேறகொள்ளத்தக்க செயலென்றும் அம்முறை தவிர வேறு வழியில்லை யென்றும் மருத்துவர்கள் கருதினார்கள். ஸ்ரீமத் சுவாமிகளிடம் நெருங்கிப் பழகி வந்தவர்களில் சிலர் இதனைக் கேள்வியுற்று இவர் ஒரு சாதாரண மானிடரே இவருக்கு முருகன் திருவருளிருப்பின் இவ்வண்ணம் விபத்து ஏற்படக் காரணமில்லையென்று கருதி இவரைப் பார்க்கக்கூட வாரமலிருந்து விட்டனர்.

சுவாமிகளின் கால் நலமடைய வேண்டி, சில சீடர்கள் தங்கள் இல்லங்களில் சுவாமிகள் அருளிச் செய்த சண்முக கவசத்தைப் பாராயணம் செய்தார்கள். கவச பாராயணத்தை உள்ளன்புடன் நிகழ்த்திவந்த ஸ்ரீ சுப்பிரமணிய தாசர் என்பாருக்குச் சுவாமிகளின் முறிந்த கால் இரண்டு திருவேல்களின் இலையலகு அடிப்படையில் பூட்டப்பட்டும் மற்றொரு திருவேல் தாங்கி நிற்குமாறும் தினந்தோறும் தரிசனமாயிற்று.

கால் முறிவு கண்ட பதினோராம் நாள் (மார்கழித் திங்கள் 22 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை பூர்வபக்கப் பிர

தமை) இரவில் தேவர்கள் மகிழும் வேலைத் தொட்ட செவ்வேட் பரமன் தமது வாகனமாகிய இரண்டு மயில்கள் விண்ணும் மண்ணும் மகிழ்வுற மேற்றிசையிலிருந்து களிநடம் புரிந்து கொண்டுவரும் திருக்காட்சியைச் சுவாமிகளுக்குக் காட்டியருளினர். அந்தப் பெருமை கூடிய திருக்காட்சியில் ஒன்று பெரியதும் மற்றொன்று சிறியதுமான பொன்னிறம் செறிந்த பச்சைவண்ண மயில்கள் தோகையை மண்டலாகாரமாக ஆகாயமெல்லாம் ஆவரணித்து நடனம் செய்துகொண்டு வந்தன.

சுவாமிகள் படுக்கையிலிருந்தவாறே இத்தரிசனம் கண்டு பேருவகையடைந்து இறைவனைப் பிரார்த்தித்திருந்தார்கள். மறு நாளிரவு ஸ்ரீ முருகப் பெருமான் ஒரு சிவந்த குழந்தை வடிவங்கொண்டு சுவாமிகளது படுக்கையில் அவரது தலைப்பக்கம் திருவடிகளை நீட்டிப் படுத்திருந்த காட்சியைக் காட்டியருளினர். சுவாமிகள் இக்காட்சியைத் தரிசித்துச் செவ்வேட் பரமனைத் தியானித்து இருந்தார்கள். அப்போது அசரீரியாக "பதினைந்து நாட்களில் இரணம் ஆறிவிடும். அதுவரை இவ்வைத்திய சாலையை விட்டு யாண்டும் போகவேண்டாம்" என்னும் திருவாக்கு உண்டாயிற்று.

காலைத் துண்டித்து விடுவதாகக் குறிப்பிட்ட நாளன்று சுவாமிகள் எழுந்து நடந்துகொண்டிருக்கக் கண்ணுற்ற மருத்துவர்கள் மிகவும் வியப்புற்று மீண்டும் எக்ஸ்ரே படம் எடுத்துப் பார்த்துவிட்டு கால் எலும்பு மிகவும் வேகமாகக் கூடிவருவதை யுணர்ந்து இறைவன் திருவருளினுல் மட்டுமே இது சாத்தியம் என்று சுவாமிகள் பால் பக்தி விசுவாசத்துடன் இருந்தனர். பதினைந்தாம் நாள் பூரணகுணமாகி சுவாமிகள் தமதிருக்கைக்குச் சென்றனர்.

சண்முக கவசப் பெருமையை உலகுக்கு நிலைநாட்டவும் ஸ்ரீமத் சுவாமிகளின் அருட்பெருமையை மக்களுக்கு எடுத்

துக் காட்டவுமே செவ்வேட் பரமன் இத்திருவிளையாடலைப் புரிந்தான்போலும் என எல்லோரும் இறைவனை மனமாரப் போற்றித் துதித்தனர்.

மயில் காட்சி கண்ட தினமாகிய மார்கழித் திங்கள் பூர்வபக்கப் பிரதமை தினத்தன்று மறு ஆண்டுமுதல் மயூர வாகன சேவனம் என்னும் பெருவிழாவை ஸ்ரீ மத் சுவாமிகள் நடத்தி வந்தார்கள். அவர்கள் 1929 ஆம் ஆண்டு சமாதி நிலையடைந்து திருவான்மியூர் சேர்ந்த பின்னர் அவர்களால் நிறுவப்பெற்ற மகாதேஜா மண்டல சபையார் இவ்விழாவை ஆண்டுதோறும் அந்நாளில் நடத்தி வருகின்றனர். ஸ்ரீமத் சுவாமிகள் தம் சீடர்களுக்கு மயூரவாகன சேவனம் மிகவும் ஒப்பற்ற விழா என்றும் அது நடத்துங்கால் தாம் வந்து இருந்து தரிசனம் செய்வதாகவும் கூறியுள்ளனர்.

இவ்வாண்டு 20-12-1968 அன்று மயூரவாகன சேவனம் சென்னையையடுத்த திருவான்மியூரில் உள்ள ஸ்ரீமத் சுவாமிகளது திருவாலயத்தில் நடைபெற இருக்கிறது. அன்பர்கள் யாவரும் வந்து தரிசித்துச் செவ்வேட் பரமனின் திருவருளுக்கும் ஸ்ரீமத் சுவாமிகளாம் குருவினருளுக்கும் பாத்திராகும்படி வேண்டுகிறோம்.

சமய ஆராய்ச்சி நிவந்தம்

அம்பை சங்கரனார்

உலகத் தமிழ் மாநாடு அண்மையில் சென்னையில் நிகழ்ந்தபோது தமிழ்மொழியின் தலையாய நீதியிலக்கியமாம் திருக்குறள் ஆராய்ச்சிக்கென தமிழக அரசு இங்குள்ள மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் தனித்தனி நூறாயிரம் வெண்பொற்காசுகள் மூலதனமாக அளித்துத் திருக்குறள் ஆராய்ச்சியை வளம்பெறச் செய்ய வழிகோலியது அன்பர்களுக்கு நினைவிருக்குமென்று எண்ணுகிறேன்.

அதைப்போன்று நம் சைவ இலக்கியங்களின் ஆராய்ச்சிக்கென சமயப் பற்றுக்கொண்ட செல்வர் யாராவது ஒரு நூறாயிரமாவது மூலதனம் வைத்து ஆராய்ச்சித்துறையில் தக்கவர்களை ஊக்கின் பல புதையல்களை நம் சமய உலகம் பெற வாய்ப்பாயிருக்குமென்று எண்ணுகிறேன்.

எடுத்துக் காட்டாகச் சிறந்த தோத்திர நூலாகிய திருவாசகம்பற்றி நம் சித்தாந்த ஆசிரியர் திரு. மு. அ. அவர்கள் பல அருமையான கட்டுரைகளைச் சித்தாந்த இதழ் வாயிலாய் எழுதி வருவது யாவரும் அறிந்ததே. அக்கட்டுரைகளை ஒழுங்காய்ப் படிப்போர் திருவாசகத்துள் ஆராய்ச்சிக்கண் கொண்டு நோக்கின் மேலும் பல உண்மைகள் தெரிய வருமென்று கருதுகிறேன்.

சென்ற திங்களிதழில் "திருவாசகம்—யாப்பிலக்கணக் குறிப்புக்கள்" எனும் கட்டுரை ஒன்று வெளிவந்தது. அதன் முடிவு மாணிக்கவாசகர் பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியதனால் அதில் அவர் யாப்புக்காகக் காத்திருக்கவில்லை. பெரும்பாலும் யாப்பிலக்கணத்துக்கு ஒட்டி வரினும் சிறுபான்மை மாறுபடுவதைக்கூட இவ்வுணர்ச்சி மாற்றத்தால் ஏற்படும் வேறுபாடு என்று நாம் கொள்ள வேண்டும் என ஆசிரியர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல்தான் எம்மொழிக்கும் உள்ள பொது மரபு. அங்ஙனமிருக்கப்படி சுவாமிகள் எவ்வாறு பாடினாலும் அதனை மேல்வரிச் சட்டமாகக் கொண்டு அதற்குப் பின்னோர் இலக்கண வரம்பு இயையுமாறு கட்டிக்கொள்ள வேண்டுமே தவிர தற்கால நிலையில் நாம் பார்த்து சுவாமிகள் பாடியது யாப்பிலக்கணத்துக்கு ஒத்துவரவில்லையென்று கூறுவது தகாது.

மேலும் சுவாமிகள் பாடிய செய்யுட்களைக் கொண்டே மூவர் முதலிகளுக்கும் மாணிக்கவாசகர் முன்னரே இருந்தார் என்று கூறவும் வாய்ப்புண்டு. மூவர் முதலிகள் சந்தப்

பாக்கள், யாப்பமைதிகளை ஒழுங்காய் வரன்முறை கெடாமல் பாடியுள்ளனர். சுவாமிகள் பாடலில் அப்படியன்று. அதனால் அதுவே பின்வரும் யாப்பு இலக்கணப் பிரிவுகளுக்கு இலக்கியமாய் வரும் பெருமையைப் பெற்றுள்ளது என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஆனால் இதை வைத்துக் கொண்டே எல்லாப் பாடல்களையும் மாறுபட எழுதிக் கொண்டு சுவாமிகள் இவ்வாறே பாடியிருக்கலாம் என்று கூறுவதும் முறையாகாது.

எடுத்துக் காட்டாக ஒரு பாடலை நோக்குவோம்.

முழுமுத லேயைம் புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வானகுழுமிக்
கெழுமுத லேயரு டந்திருக் கவிரங் குங்கொல்லோவென்
றழுமது வேயன்றி மற்றென் செய்கேன்
பொன்னம்ப லத்தரைசே

என்று இப்பாடல் திருவாசகப் பதிப்புகள் பலவற்றிலும் இருக்கிறது. இதைப் பதிப்பாசிரியர் பலரும் சீர் பிரிக்கும்போது மிகவும் அல்லற்பட்டுப் பிரித்துள்ளனர். கடைசியில் இது விருத்தமுமன்று, கட்டளைக் கலித்துறையுமன்று; மாணிக்க வாசகர் பாட்டில் இவ்வாறெல்லாம் பார்க்கக்கூடாது என்ற முடிவுக்கு எளிமையாய் வந்து விடுகின்றனர். பிற பாடல்களுக்கு அவ்வாறு சொன்னாலும் ஏற்றுக் கோடலாம்.

இப்பாடலைப் பொருத்தமட்டில் அவ்வாறு கூறின் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

இப்பாடல் கட்டளைக் கலித்துறையாப்பில் அமைந்துள்ளது. இதில் முதல் இரு அடிகள் ஒரு யாப்பிலும் பின்னிரு அடிகள் மற்றொரு யாப்பிலும் வரவும் நியாயமில்லை. கட்டளைக் கலித்துறை மிகவும் தக்க யாப்பமைதியோடு கூடியது. சிறிது சந்தம் மாறுபடினும் எழுத்துக்கள் குறைந்து தளை கெட்டுவிடும். இந்நிலையில் இதனை மாறுபடுத்தினால் பொருள், யாப்பு அமைதி முதலியன கெடுவதியற்கை. அந்நிலைதான் இப்பாடலுக்கும் ஏற்பட்டுள்ளது.

திருவாசக ஏட்டுப் பிரதிகள் நாற்பத்தொன்பினை மர்ரே கம்பெனி அதிபர் திரு. இராசம் அவர்கள் துணைகொண்டு சில்லாண்டுகளுக்கு முன் யான் பார்க்க நேர்ந்தது. அவற்றுள் நிறைவுச் சுவடிகள் 23. குறைச் சுவடிகள் 18. அந் நிறைச் சுவடிகள் இரண்டில் இப்பாடலின் ஈற்றடி,

"றழுமது வேயன்றி யென்செய்கேன் பொன்னம்ப
லத்தரைசே"

என்று இருக்கிறது. இவ்வாறு இவ்வடியிருப்பதுதான் மிகப் பொருத்தமென்று யான் கருதுகின்றேன். இங்கு அன்றி என்னும் எச்சம் வந்து வினைமாற்றுப் பொருளைத் தந்துள்ளதால் அதே பொருளைத் தரக்கூடிய மற்று என்னும் இடைச் சொல் வந்து நிற்பது பொருத்தமில்லை. மேலும் அசைநிலையாக் கொள்வதற்கும் ஈண்டு அவசியமில்லை. அசைநிலையில்லாமலே கட்டளைக் கலித்துறை யிலக்கணம் அமைந்துள்ளதை அறிஞர்கள் ஆய்ந்து தெளிவார்களாக.

எட்டுச்சுவடிகளிரண்டில் ஆதாரம் உள்ளதால் யான் இப்பாடமே வலியுடைத்தெனக் கருதுகின்றேன். இனி மூன்றுவது அடி கட்டளைக் கலித்துறையிலக்கணத்துக்குப் பொருத்தமில்லையே எனச் சிலர் கூறலாம். தற்பொழுதிருக்கும் நிலையிலேயே கட்டளைக் கலித்துறை என்று கூற வாய்ப்பிருக்கிறது.

"தந்திருக் கவிரங் குங்கொல்லோவென்"

என்னும் பகுதியில் 'கவிரங்' என்னும் சீர் சிறிது விட்டிசைத்துக் காணப்படுகிறது. "குங்கொல்லோவென்" என்னும் பகுதியில் லகாரம் விரித்தல் விகாரமாய் வாய்ந்துள்ளது. ஏட்டினை நன்கு துருவிப் பார்த்தால் இந்த ஐயமும் தீர்க்கப்படலாம் என்று யான் கருதுகிறேன்.

தந்திருக் கென்பதும் தந்தீருக் கென்பதும் பெரும்பாலும் எட்டில் ஒன்றுயே தென்படும். 'கவிரங்' என்றுள்ளதா 'காவிரங்'கென்றுள்ளதா எனவும் சிறிது உற்றுக் கவனித்தல் நன்று.

யாப்பமைதி முதலியவைகளையெல்லாம் மனத்துட் கொண்டு உண்மைப் பாடத்தை இவ்வாறு பார்த்தால் தெளிவு புலப்படும்.

இதனைப் போன்று பல உண்மைகளைத் தெரிந்து கொள்ள ஆராய்ச்சி, சமயப் பிரிவிலும் இன்றியமையாது வேண்டற் பாலது என்று எண்ணுகிறேன். ஆனால் எவ் வடிப்படையைக் கொண்டாவது பாடத்தை உறுதிப்படுத்த வேண்டுமேயொழிய அவரவர்கள் மனங்கொண்டவாறு திரு வாசகத்தைத் திருத்திக்கொண்டே போகின் அதன் புனிதத் தன்மை, உண்மை யுருவம் முதலியன கெட்டுவிடும்.

ஆகவே சமயப் பற்றுமிக்க செல்வர்கள் நம் சமாச வாயிலாய் இத்தகைய ஆராய்ச்சிக்குரிய நிவந்தம் ஒன்றினை ஏற்படுத்தி உலகமுள்ளளவும் நிலையாய புகழ்ச் செல்வத் தைப் பெற முன் வருமாறு வேண்டிக் கொள்கின்றேன். அன்பர்கள் ஆவன செயற்பட முன் வருவார்களாக.

நரியும் பரியும்

(சிவயோகி இரத்தினசபாபதி பிள்ளை)

(சென்ற இதழின் 330 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆணை என்பது பிரணவமாகிய ஜீவநிலை அதில் முன்னேறுதல் சிவத்தை நோக்கிச்செல்லும் அறிவு. பின்னே றுதல் பிரகிருதியை நோக்கிச் செல்லும் அறிவு. பிரணவத் தைப் பின்னிட்டுச் சிவத்தை முன்னிட்டுச் செல்லும் அன்பர் கள் பணியும் பொருட்டு உடலில் எங்கும் குண்டலினியான சர்ப்பத்தைத் தரித்தவனும் ஆரூரமர்ந்த பெருமானேதான்.

இத்தகைய குண்டலினி யோகத்தை அப்பர் பெருமான் விளக்கிக் காட்டினார். இந்தப் பாசுரத்தில் காட்டிய நரியை யும் குதிரையையும் அறிக. குதிரை என்பதும் பரியென்பதும் இரண்டும் ஒரு பொருளுடையனதான். பரி என்னும் சொல் குதி ரையை விட வேறு பொருளும் உடையது அவைகளில் "பாது காப்பு" என்று ஒரு பொருளும் உண்டு. பொதுவாகத் தாவிச் செல்லும் குதிரையைக் காட்டவே வெட்டுக் குதிரை வாகனம் அமைத்துள்ளனர், அதின் கால்கள் வானோக்கிப்

பாய்வதாக அமைந்து நிற்கும். இதுவே வானேக்கிய தத்துவத்தை உணர்த்தும. இதைத்தான் மணிவாசகர் "வான் புரவி" என்ருர். வழி, பெருமை, உயரம், விரைவு முதலிய பொருள்களும் உண்டு.

இனி சுந்தரர் வழியில் குதிரையையும் நரியையும் ஆராய்வோம்.

நரிபுரி காடரங் காநட மாடுவர்
வரிபுரி பாடலின் ருடுமெம் மாண்டம்
புரிசுரி வரிகுழ லரிவையோர் பான்மகிழ்ந்
தெரிஎரி யாடித னிடம்வலம் புரமே.

இந்தப் பாசுரத்தில் வலம்புரம் என்ற ஊரைக் காட்டுகிருர். வலம்புரம் என்பது என்ன என்பதை உணர்ந்தால் உண்மை விளங்கும். முகத்திற்கு முன்புறம் வெளியுலக திசைசம்பந்த மன்று. எங்கே யிருந்தாலும் கிழக்கென்றே வேதவிற்பன்னர் கொண்டனர். பிரசனேபநிஷத் பார்க்க விளங்கும், முகத்திற்கு முன்புறம் சூரியன் உதயமானுல் அதன் எதிர்ப்புறமான பிடரிப் பக்கம் மேற்கு. இந்தத் துருவத்தை வைத்துக் கொண்டு சிரசைச் சூழ்ந்துள்ள ஆகாயப் பகுதியை எட்டுத் திக்குகளாகப்பிரித்தால் வலது காதுப் புறம் தெற்காகவும் இடது காதுப் புறம் வடக்காகவும் அமையும். வலது காதுக்கும் புருவத்திற்கு மேலும் உள்ள இடைப்பகுதி அக்கினி மூலையாகும். இது வலது கண் பாகத்தில் மேலே உள்ளது. இதற்கு அக்கினியின் ஆதிக்கம் கொண்ட திக்கு என்று ஆகமவாதிகள் கொண்டுள்ளனர். கோவிலில் துவஜாரோகணம் செய்யும் போது இந்தத் திக்கில் பூஜித்துத்தான் துவஜாரோகணம் செய்வர். இங்கு பூஜிக்கும ஆதிசைவர் ஆமை போன்ற ஒரு வடிவம் செய்யப்பட்ட ஒரு பலகையில் அமர்ந்து பூஜை செய்வர். இதன் சூக்ஷ்மம் உணரத்தக்கது. நித்தியம் என்ற பூஜையில் கொடி ஏற்றும் விவரம் இல்லை. நைமித்தியம் என்ற சிறப்பு விழாவில் இந்த மூலை இடம பெறுகிறது. பரார்த்தத்தில் விழா சிறப்பு வழிபாடு. ஆத்மார்த்தத்தில் யோகம், ஞானம சிறப்பு வழிபாடு. யோகம் என்ற சொல் சேர்க்கை என்ற பொருளுடையது. யோக நிலையில் சூரிய சந்திர நிலைகளை ஒன்றுபடுத்தினுல் அக்கினி கலையானது விளங்கும். இந்த அக்கினி கலையில் தான் கால பைரவரும் உள்ளார், ஆனந்தக்கூத்தரும் உள்ளார். நிலைதான் வேறுபாடு. ஜீவன் பிரகிருதி வயப்பட்டபோது ஜீவனை அறியாது மூலாதாரத்திலிருந்து காமகலையில் காலபைரவராதி பெயர்களால் அஷ்டபை

ரவராக விளங்குகின்ருர். இந்தக் கர்மகலையில் உள்ள கலையே தான் சிரசின் வலப்புரத்தில் அக்கினி மூலையில் உதிக்கும் சூரியனுக உள்ளது சரீரத்தின் அறிவு என்ற சூரியன் வலது கண்ணுக்கு மேலே உடலின் தொடர்பன்றி உள்ளதை குரு காட்ட சீடன் உணர முடியும். இதைத் ''தெரியெரியாடி தனிடம் வலம் புரமே'' என்ருர். கீழுள்ளபோது இந்த அக்கினி கலையே ''நரிபரி காடரங்கா நடமாடுவர்'' என்ருர். இந்த இரு நிலைகளிலும் உள்ள சிவம் பிரகாசம் காரணமாக ''நரி புரமாகவும், தெரியெரிதனிடமாகவும்'' கொண்டார்.

இந்த அக்கினி கலையில் பிரகாசிக்கும் தேஜோமயத்தை உணரவே பல வரிகளால் துதிபாடுகின்றனர் என்பதை ''வரி புரி பாட நின்ருடு மெம்மான்'' என்ருர்.

இடப்பாகத்தில் சங்குத் தொனியை யுண்டாக்கும் வீணாத்தண்டில்பாயும் சுழிமுனை நாடியாகிய குழலில் விளங்கும் உமாதேவியாகிய குண்டலினி சத்தியை யுடையவன் என்பதை இடம் புரிசுரிவரி குழலரிவையோர்பால்'' என்ருர். இது சந்திரகலைப் பிரபாவத்தால் அமைவது, இந்த இரு நிலைகளையே மணிவாசகர் கையாண்டுள்ளார்.

சூரிய விளக்கத்தை ''பூவலமதனிடம் பொருந்தி பாவ நாசமாக்கியும்'' என்ருர். சிரசுக்குத் தென் பாகத்தில் உடலின் தொடர்பற்று ஆகாயத்தில் விளங்குவதை ''தேவூர்த்தென் பால் திகழ்தருதீவில் கோவார்ந்த கோலம் கொண்ட கொள்கையும்'' என்ருர்.

இந்த இரு நிலைகளும் ஒருசேரப் பொருந்தி சிரசுக்கு மேல் விளங்குவதுதான் ஆரூரன் என்பதை அறிவதே யோகம். இதைத் ''நேனமர் சோலைத் திருவாரூரில் ஞானம் தன்னை நல்கிய நன்மையும்'' என்ருர் மணிவாசகர்.

இந்த மூன்று நிலைகளே தான் உடலின் பகுதியில் பொருந்தியும் உடலைக் கடந்தும், அப்பிரகாசமாயும் பிரகாசமாயும் அமைந்து உடலைத் தாங்கியும், தரித்தும், ஞான மயமாகவும் அஞ்ஞான மயமாகவும் உள்ளது.

இந்தப் பாசுரத்தில் சுந்தரர், ''இடம் இருந்த சத்தியை இடம்புரி என்ருர். அறிவை வலம்புரி என்ருர். சூரிய சந்திரர்கள் என்ற ஒளி நிலைகள் இரண்டும் அறிவுமயமானவைகள் தான். தன்மையில் வித்தியாசம். சந்திரன் தண்ணளி சத்தி

யாகி சாந்த நிலையில் விருத்தி. சூரியன் வெப்பமாகிய ஆண்மையில் விருத்தி. இரண்டும் சமப்பட்டபோது ஆன்மா அறிவும் அருளும் உடையவனாகி சிவசக்தியினிடையே தான் வாழுகிறான். ஜீவனின் அறிவு நிலை விளக்கம் இரு நிலைகளிலும் உள்ளது. தண்ணறிவில் வளர்வதையே உத்தரகோச மங்கை என்று இடதுபுற சக்தியால் மணிவாசகர் குறிப்பிடுகிறார். இடது கண்ணுக்கு மேலுள்ள ஒரு ஒளி நிலையைத் தான் வாகீஸ்வரன், வாகீசுவரி, ஈசானன், ஈசானி முதலிய பேர்களால் அழைக்கிறார்கள். இதன் பிரபாவத்தைத் திருமந்திரம் அஷ்டதள கமலம் என்ற எட்டாம் தந்திரம் பார்க்க விளங்கும்.

இதை உணர்தலே தான் "சந்திரதீப சாத்திரனாகி" என்பதாம், திருவாசகத்தில் தசாங்கமும் இதனாலேயே அமைகிறது. சிவபூசகர்களும் புருவமையமான இடத்தைத் தொட்டு வாமதேவர் இடமான இடது பக்க சிரசையும் அகோரதேவர் இடமாகிய வலது பக்க சிரசையும் வக்திர பந்திநியாசம் செய்யும்போது தொடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு அந்த நியாசத்தில் உணரும் ஆற்றல் இல்லை.

மஹாமாயை என்ற குண்டலினி சக்தியை உமையவளாகவும் அவளே கீழ்நோக்கித் தொழிற்பட்டபோது காளியாகவும் ஆகமவாதிகள் கொண்டனர். காளி சிறப்பாக ஊனுடலில் தொழிற்பட்டபோது சித்சக்தி சிறப்பாகத் தொழிற்படவில்லை. சித்சக்தி சிறப்பாகத் தொழிற்பட ஆரம்பித்தால் காளியின் ஆட்டம் முடிவுறும். மகாமாயையின் வியாபகம் தொடர்பு தோளுக்குமேல் தொடங்கி, துவாத சாந்தம் வரையிலும் மேலும் செல்லுகிறது. மகாமாயையையும் சிவத்தையும் உலக காரணர் என்று கொண்டனர். சகல ஜீவப்படைப்பும் இவர்களிடமிருந்துதான்.

மாயைகைத் தாயாக மாமாயை யீன்றிட
லாய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏயும் உயிர்க்கே வலசக லத்தெய்தி
ஆய்தகு சுத்தமுந் தான்வந் தடையுமே 2268

அறியகி லேனென் றரற்றாதே நீயும்
நெறிவழி யேசென்று நேர்பட்ட பிள்ளை

இருசுட ராகி இயற்றவல் லானும்
ஒருசுட ராவந்தென் உள்ளத்துள் ளாமே 2350

இதுகாறும் திருமூலர் வாக்காலும், திருநாவுக்கரசர் வாக்காலும், சுந்தரர் வாக்காலும் விளக்கப்பட்டது. இனி நரி பரி கதைக்குரிய விளக்கம் தெரிய மணிவாசகரிடம் செல்வோம். கீர்த்தித்திருவகவல்,

"மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுசொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெருஅ
தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டிய சோதி தோற்றிய தொன்மையும்

இதன் பொருள் :—

மொக்கணி—குதிரைக்குக் கொள்ளுவைக்கும் பைக்குப் பெயர். இங்கு அன்னத்தாலாகிய உடலைக் குறித்தது.

சொக்கம்=சிவப்புக்கல்
அரியினிடம்—நாபித்தானம்
பிரமனிடம்—குறிப்பிரதேசம்

இருவரின் வியாபகம் சதாசிவத் திருமேனியாகிய சிரசுக்கு உள்ளதானலும் சிறப்பு ஆட்சி கண்டத்திற்குக் கீழே தான். பூ, புவர், சுவர் என்ற மும்மண்டலங்கள் வரையில் விஷ்ணுவின் ஆதிக்கம். இதற்குமேல் சதாசிவ சூரியன் உள்ளது

"அரியொடு பிரமற்கு அளவறி வொண்ணாத சிவம் ஊனுடலில் செவ்வொளியுடன் பொருந்தி பழமையாக அடியார்க்குக் காட்சி கொடுத்தும், நரிக்கூட்டங்களான கருவி கரணங்களைச் செயலினின்றும் மாற்றி துரிய பூமியில் நடக்கும் குதிரையாக்கியும் அவ்விதம் சிவம் பாண்டியனுன சீவனே

ஆண்டு தன்னடியாருகச் செய்ததும் அன்றி, பாண்டியனுடைய பொருளுக்கு விரும்பிச் செய்யவில்லை கைம்மாறு கருதாத சிவம் ஆண்டு கொண்ட நெறியில் நின்ற பாண்டியனுக்குத் தன்னை இதுகாறும் தன்னறிவில் மறைந்து செலுத்திய சிவசோதியைக் கண்ட பழமையும்''

இங்கு சொக்கநாதகக் காட்டிய தொன்மையும், தூண்டிய சோதி தோற்றிய தொன்மையும்—என்றிரு இடங்களிலும் தொன்மையை உபயோகிக்கிருர் பண்டு என்ற தாதுவினடிப்பிறந்தது பாண்டியன். இது இங்கு சீவனைக் குறிப்பது முன்னது உடலில் கருவி கரணங்களுடன் தங்கு தடையின்றி ஒளிச்செல்வது. பின்னது உடலைக் கடந்த துரியபூமி. ஜீவன் பழைய பேர்வழி. உடல்தான் புதுப் பேர்வழி என்பதை உணரவும்.

இதையே மேலும் விஸ்தரித்துச் சிவம் எப்படிப் பிரகாசித்தது என்பதைப் பினுல் விளக்குகின்ருர்.

ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும்
ஆனந் தம்மே யாறு அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தனைக் கைக்கொண் டருளியும்
மூல மாகிய மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு ஜோதி
காதல னுகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்
ஆதி மூர்த்திக் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி

இந்த வரிகளில் மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியும் சிவமும் புறப்பட்டு மேலே சென்றபோது அமைந்த மாற்றங்களை மாணிக்கவாசகர் விளக்குகிறார், தேகத்தில் உந்தியை இடமாகக் கொண்டுள்ளபோது தேகமேதான் என்ற எண்ணம் கொண்டுள்ள சிவனிடம் சுருண்டு கிடந்த பாம்பு நீண்டு ஓடுதல் போல குண்டலினி நிமிர்ந்து மேலே சென்றது. அது எப்படி மேலே செல்கின்றது என்பது யோகியர்க்கே தெரிந்தது. கிரியையிலுள்ளோர் ஒவ்வோரிடமாக நிவர்த்தி கலையை பிரதிஷ்டையிலும், பிரதிஷ்டையை, வித்தையிலும், வித்தையை சாந்தியிலும், சாந்தியை, சாந்தியதீதகலையிலும் அடைந்துவிட்டதாக எண்ணிக் கொண்டு பாவனை செய்வர். கிரியைவழி நிற்போர் பாவனை சரிதான். ஆனால் நடைமுறையில் ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவருக்கு இம்மாற்றம் அமையுமோ என்னவோ? அதுவும் சந்தேகம். யோகிகளே இதன் உண்மையை அறிவர்.

பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்கும் காணவொண் ணாத அரும்பொருள்
நீருக்குந் தீக்கு நடுவே யுதிப்பவன்
ஆருக்கும் எட்டாதம் ஆதித்தன் தானே 1982

மண்ணை யிடந்ததின் கீழோடும் ஆதித்தன்
விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடுங்
கண்ணை யிடந்து களிதந்த வானந்தம்
எண்ணுங் கிழமைக் கிசைந்துநின் றானே 1983

பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரும் அறியார் அருங்கடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழென்பா
ஊரை உணர்ந்தார் உணர்ந்திருந் தாரே 1984

இந்தத் திருமந்திரங்களுக்குப் பொருள் விளங்குவதில் சிவயோகம் அமையும். பொழிப்புரையும் விளக்கமும் தருகிறேன். இவை திருமந்திரத்தில் அண்டாதித்தன் என்ற தலைப்பில் உள்ளவை. அண்டாதித்தன் என்றால் அண்டத்தில் உள்ள ஆதித்தன் என்பது பொருளாகும். அண்டம் என்ற சொல் முட்டை, ஆகாயம் ஆகியவைகளைக் குறிக்கும். மனிதனுடைய காணப்படுகின்ற உடலைச் சுற்றி ஒரு தொம்பைக்கூடு போன்ற ஆகாயவட்டம் சூழ்ந்துள்ளது. அந்த முட்டைபோன்ற ஆகாயக்கூறில்தான் மனிதனின், ஐந்தொழில் இயக்கமும்

நடைபெறுகிறது. புருடனுன சூரியன் உந்திக் கமலத்தில் உள்ளான். அவன் அஞ்ஞானவயத்தனுய் அறிவு குறைந்தவனுய் தேகமேதானென்றும் கருவி கரணங்களே தனது அறிகருவிகள் என்றும் திடநம்பிக்கையிலுள்ளவன். இத்தகைய ஆதித்தனே ச்சிரசின் மேல் ஆகாயத்தில் பிரகாசிக்கச் செய்து ஒளிமண்டலம் அமையும்போது நரிப்புரம் அகன்று குதிரை செல்லும் இராஜ விதியும் மதுரையாகிய துவாத சாந்தி வெளியும் புலப்படும்.

''ஆனலும் அறிந்துகொள்ள முடியாத சீவர்களுடைய ஆதித்த நிலே நீர்மண்டலமான உந்திக் கமலத்திற்கும் தீமண்டலமான இருதயத்துக்கும் இடையே உதிப்பது. அத்தகைய சூரியன் பூமிக்கும் கீழே புறப்பட்டு வருவது யாருக்கும் பார்க்க முடியாத பெரிய பொருளாக உள்ளது"

''அந்தச் சூரியன் பூமிதத்துவத்தைப் பிளந்து அதின் கீழேயும் சென்று ஆகாயத்தைப் பிளந்துகொண்டு வெளியில் (சிரசுக்குமேல்) கண்ணேப் பிளந்துகொண்டு சாதகனுடைய நினைப்பாற்றலுக்கு இயைந்து இன்பப் பெருக்கால் அடையும் ஆனந்தமாக வெளிப்படுபவனுக உள்ளான்''

பூமியைப் பிளந்து கொண்டு சூரியன் வரும் வழியை அறியாத நூல் பற்றிப் பேசுவோர் தள்ளத்தக்க கடைநூலின் வழிநிற்போரே ஆவர். அறிந்தவர்கள் அத்தகைய தீரனே சிரசின் பகுதியில் சூழ உதிப்பன் என்று சொல்வர். அவன் உதிக்கும் ஊரை உணர்த்த உணர்ந்தவர்கள் இந்தச் சூரியனே உணர்ந்தவர் ஆவார்.

புருடதத்துவம் விஷ்ணுவால் ஆளப்படுகிறது. அவர் சிரசில் சூரியன் உள்ளான என்பர் (கதிர்முடித்திருநெடுமால்—போற்றித் திருவகவல்). அங்கிருந்து அண்டபிண்டம் நிறைந்த சிவதாணுவை அறிய பூமியைத் துளைத்துக்காண முடியாததை மால் அறியச் சென்றதையும் நான்முகப் பிர்மா உயிர் ஆகிய அன்னத்தில் உயரச் சென்றதையும் உணரவும். இதன் பொருள் சிந்தனைக்குரியது. காம நிலேயில் கவர்ச்சியில் காமத்தின் வேகத்தைத் தாங்கமாட்டாதவர்களாய் இந்திரிய நீக்கம் பெற்று வலிமையைப் பலர் இழந்துவிடுகின்றனர். சுக்கிலம் வெளிப்படாது தடை செய்வது ஆகுஞ்சனம் என்ற ஆசனம்; அல்லது பரியங்கயோகம்.

இவைகளேக் குருமுகமாய்க் கேட்டறியவும். அப்படி கீழ்ப்பகுதி தடுத்து திறுத்தப்பட்டால் எந்த வாயு

சுக்கிலத்தை நீக்கம் செய்கிறதோ அதே வாயு புருட சத்தியை மேலேறச் செய்கிறது. அருளில்லாமல் பிரம்ம பிரயத்தனமும், விஷ்ணுவின் பிரயத்தனமும் வீணாயின. வேத சொருபமானது வாக்கு. அதையே அன்னமாக்கி பிர்மன் பறந்தான் என்றனர். பன்றி மலமுண்ணும் பிராணி. காமத்தில் மேலும் கலவியில் மேலும் ஈடுபட்டது விஷ்ணு தத்துவம். அருளின் வழி நிற்போர்க்கு காமவாயு மூலாதாரம் நோக்கிக் கீழிறங்கி சுழிமுனை வழியாகவே மேலேறுகின்றது. கிரியை வழி நிற்போர் உடலின் முன்புறம் ஆதாரச் சக்கரங்களை நினைத்துக்கொண்டுள்ளனர். அதனால் கிரியை அறிவை கடை நூலாவர் என்றார். பிர்மஸ்தானம் ஆகிய குறியிலிருந்து வளைந்து மேனோக்கி ஏறுவதை உணர்ந்தபோது,

"நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"
"ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
வெளிப்பட
"மண்ணிற் றிண்மை வைத்தோன்"

என்றவைகளைச் சிந்திக்க. அழகமர்திருவுரு வாமதேவ மூர்த்தி. இவர்தான் சந்திரதீபமாகக் காமகலையிலிருந்து இடது கண்புறம் உதிப்பவர். இவரேதான் "களிதரு ஆனந்தர்." இவர் மந்திரங்கள் மனனம் செய்யும் வாக்கின் சக்தியில் இருந்து (தொண்டையிலிருந்து) மேனோக்கி எழுபவர். எண்ணுங் கிழமைக்கு இசைந்து நிற்பவர். இவர் உதிப்பதை மந்திரமலையாகிய பிரணவ யோகம் என்றனர். காமகலையில் விளங்கி மேலேறுவதால் "ஆனந்தமே ஆறு அருளியும்" என்றார். உடலில் இருந்த அக்கினி கலையிலிருந்து வெளிப்பட்டு மேலேறி எப்படிக் காட்டிலிருந்த மூங்கில்கள் உரசுதலினால் நெருப்புண்டாகிக் காட்டையே அழித்து விடுகிறதோ அது போலவே உடலையே சோதி வடிவமாக மாற்றி விட்டு ஊனுடலை உயிர்ப்பசையறப் பிரித்து விடுவதாக உள்ளது.

(திருமந்திரம்–116)

இத்தகைய சிவம் ஆண் பெண் தன்மை கலந்ததாக உள்ளது என்பதை "மாதிற்கூறுடை மாப்பெருங்கருணையன்" என்றார்.

சிரசின் மேல்பகுதிக்குச் சென்றபோது தசநாதங்கள் கேட்பதாயும், அந்த நாதத்தில் சம்மியம் செய்பவரை மும்மலங்கள் பற்றுவாறு சூலத்தலையில் நின்று ஆளுபவனாகவும்

சிவன் உள்ளான் சூலத்தலை என்றது மூன்று பிரிவுடைய கூர்மையுள்ள கவர்முள்களால் ஆயது. இவை மூன்றும் சோம, அக்கினி, சூரியருகும்.

காதலன் காதலியைத் தனது காதலை உணர்த்த செங்கழு நீர் மாலையைத் தரித்து வருவதுபோல் சிவன் சீவனை ஆட் கொள்ள வரும்போது முதலில் தெரிவது ஊதாநிறம். இது நீலமும் சிவப்பும் கலந்தது. இந்த ஒளி கண்டவர்கள் இந்த யோகத்திற்குத் தகுதியுடையவர் என்பது பொருள். இதை உணர்த்த "காதலனைக் கழுநீர்மாலை ஏலுடைத்தாக எழில் பெற அணிந்துமே" என்ருர்.

இவன் பிரமத்திற்கும் விஷ்ணுவுக்கும் அளவிட முடியாத வன், குதிரைமீதேறிப் பயின்ற வண்ணமும் என்பதை "அரி யொடு பிரமற்கள வறியாதவன் பரிமாவின் மிசைப்பயின்ற வண்ணமும்" என்கிருர்.

இங்கு பயின்ற என்ற சொல்லாட்சி மிகப் பொருளுடை யது கீர்த்தித் திருவகவலில் 2 ஆம் வரி 'பயின்றனனுகி' என்று கூறியுள்ளார். ஜீவனுடன் இருந்து பழகினன் என்றபடி மாணு க்கனேடு சேர்ந்து பயின்ருன் என்பது சீவர்களின் அறிவு, சுகம், துக்கம் இவைகளில் சிவமே விளங்கி அவற்றை உணர்ந் தும் உணர்த்தியும் செய்கிறது. அதாவது சீவன் நரி நிலையிலி ருந்து குதிரைச் சவாரி செய்வதற்குப் பழகினன் என்பது பொருள்

நரிப்புரம் போய் குதிரை செல்ல வேண்டிய ராஜதா னியை அடைந்த வியாபகமாய்விட்டபடியால் மீண்டும் சீவன் நரிப் புரம் போக விரும்பாது தலைநகரிலேயே தங்கி விடும் என்பதையும், அதுவே சீவனுடைய முதல் என்பதையும்

"மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்" என்ருர்.

பத்தி செய்பவரை மிக மேலான நிலையில் வைப்பவன். பரம் என்ருலே மேலானது என்று பொருள்படும். இரண்டு தடவை சொன்னபோது மேலானதுக்கு மேலானது. அதா வது அதற்குமேல் ஒன்றுமில்லை என்றபடி. இதை "பத்தி செய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்", என்ருர்.

ஒரு அரசனது ஆளுகை எல்லையை இராஜதானி என்கி ருேம். இருந்தாலும் இடத்தைத் தலைநகர் என்கிருேம்.

அவன் சேர்ந்த வாசமாகிய பிறந்த இடத்தை ஊர் என்கிறோம். அம்முறையிலே இங்கு மணிவாசகர் உத்திரகோச மங்கை என்ற இடது கண்ணின் மேல்பாகத்தை ஊர் என்றும், பிரமரந்திரத்தைத் தலைநகர் என்றும், சிரசின் மேலுள்ள ஒளி மண்டலத்தைப் பாண்டி நாடு என்றும் கூறுகிறார். இதை நன்கு அறிய வேண்டின் அஷ்டதள கமலம் என்ற திருமந்திரம் பார்க்கவும். பிரமரந்திரப் புழைக்குமேல் மதுரை என்று கொள்ளவும். இதை உத்தரகோச மங்கையூர் என்றார்.

இதன் பெருமை தசாங்கத்தில்

"கோதாட்டிப் பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற்
கொண்டாடும் உத்தர கோசமங்கை யூர்" என்றார்.

இவனே ஆதி மூர்த்திகளாக உள்ள பிரமன், விஷ்ணு, உருத்திரர்களுக்கு அதிகாரம் அருளியவன். ஆகவே இவன் தேவதேவனாக உள்ளான். "தேவதேவன் திருப்பெயராகவும்" என்றார்.

எப்படி சூரியன் உதயமானபிறகு இருள் இல்லையோ அல்லது இரண்டும் சேர்ந்திருக்க முடியாதோ அதுபோலவே உடலை ஆளும் இந்த சிவசூரியன் வெளிப்பட்டு மேலேறுவது இருளிலே இருக்கும் காம கலையிலிருந்துதான். அப்படி வெளிப்படுவது ஸ்திரியுடன் பொருந்தும் இன்பத்தை ஆளுவதிலோ பொருந்தாது; அடக்குவதிலோ அமைந்துள்ளது என்பது இரகசியமாக உள்ளது. ஆகாயப்பேறு காமஜெயத்தினாலேயே அடையத்தக்கது.

மேதா நாடி பன்னிரண்டு ஆண்டு விந்து நீக்கம் அற்றவருக்குத்தான் அமையும். இதுவே வனவாச நுட்பம்.

பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி
அயனெடு மாலறி யாவகை நின்றிட்
டுயர்நெறி யாயொளி யொன்றது வாமே 2807

இதன் மேலும் தசாங்கத்தைப் பார்த்தறியவும் குண்டலினி தேவனை ஆரூரனென்றும், இவன் பிரகாசிதமான இடம் அழகு பொருந்திய சிரசின் மேற்பகுதி யென்றும், உத்தர கோச மங்கை என்பது ஈசான்யதிக்குப் பாகம் என்றும், இவன் வெளிப்படுவது ஆனந்தத்தில் என்பதும், இதுவே முத்தி மலை என்றும் சிரசின்மேல் செல்லும் உணர்வே வான் புரவி என்றும் மேலே முச்சுடர் விளங்குவதை சூலப்படை என்றும் உணர்த்தப்பட்டது. வெளிப்பட்டு வருவதை நாதமய

முரசாலும், ஊதா வெளிச்சத்தாலும் அறியலாம் என்பதையும் காட்டப்பட்டது.

போற்றித் திருவகவலில்,
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா யரிகே சரியாய் போற்றி

கேசரி மார்க்கம் என்றது ஆகாய வீதியில் செல்லும் குதிரையை உணர்த்தியேதான்.

திருவம்மானையில்,
''இந்திரனும் மாலயனும்''
''துண்டப் பிறையான்''
''பெற்றி பிறர்க்கரிய''
திருப்பூவல்லியில்,
''மாவார ஏறி''
அன்னைப் பத்து—''பள்ளிக்குப் பாயத்தார்''
குயில் பத்து—''இன்பந்தருவன்''
''உன்னை உகப்பன''
''வா இங்கே குயில் பிள்ளாய்''
திருப்பாண்டிப் பதிகம்—''பருவரை மங்கை''
''சதுரை மறந்தறி''
''நீரின்ப வெள்ளத்''
''செறியும் பிறவிக்கு''
''மாயவன் அப்பரிமேல்''
''விரவிய தீவினை''
உயிருண்ணிப் பத்து—''இரும்பு தருமனத்தேனை''
திருவார்த்தை —''வேடுருவாகி''
'' அங்கணன் எங்கள் ''
திருப்படை யெழுச்சி—''ஞானவாள் ஏந்து''
திருவெண்பா—''மூவரும் முப்பத்து மூவரும்''
''உள்ளமல மூன்றும்''
பண்டாய நான்மறை—''காட்டகத் தேவேடன்''
ஆனந்த மாலை—''நரியைக் குதிரைப் பரியாக்கி''

இவைகளை மேல்கண்ட கருத்தில் அறிந்துணர்ந்தால் யாவும் தத்துவம் என்பதும், புராண வரலாறு வெளிப் படையானாலும் ஆழ்ந்த பரிபாஷையாக ஆன்றோர் இவை களை வைத்துள்ளனர் என்பதும் புலனாகும்.

உ

சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை.

சைவத் தேர்வு வினாக்கள் - 1968

சைவப் புலவர் தேர்வு

இலக்கணம்

காலம் 3 மணி] [மதிப்பெண் - 100

குறிப்பு :—(1) கீழ்க்காணும் உட்பிரிவுகளில் வகைக்கொவ்வொன்றாக 4 பிரிவுகளை நீக்கிவிடுக.

(2) மதிப்பெண் சமம்.

(அ) 1. "அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே" இதனை விளக்கி வரைக.

2. முன்னிலை வினைச்சொற்கள் முடியுமாற்றினைத் தொல்காப்பியர் எங்ஙனம் பிரித்துக் காட்டுகிறார்?

3. 'புளி' என்னும் பெயர் வருமொழிகளுடன் புணரும்போது எவ்வெவ்வாறு மாறுபட்டு வரும் என்பதை விளக்குக.

4. "மக்கள் என்னும் பெயர்ச்சொல் இறுதி
தக்கவழி அறிந்து வலித்தலு முரித்தே"
—விளக்குக.

5. பதிற்றுப்பத்து என்பதற்குப் புணர்ச்சிவிதி கூறி விளக்குக.

(ஆ) 1. "வேற்றுமை தாமே யேழென மொழிப" இவ்வாறு கூறக் காரணம் யாது? ஆய்க.

2. பொருண்மை தெரிதல், சொன்மை தெரிதல் பற்றி விளக்குக.

3. "செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே"
— இதற்குச் சான்றுகாட்டி விளக்குக.

4. உரிச்சொல் பற்றிப் பிறர் கொள்கையையும் சேனாவரையர் கொள்கையையும் விளக்குக.

5. "வினையின் றொகுதி காலத் தியலும்" இதற்குச் சேனாவரையர் கருத்தையும் பிறர் கருத்தினை மறுக்கும் நிலையையும் விளக்கி வரைக.

(இ) 1. "பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டல்" பற்றி விளக்குக.

2. ஏறிய மடல்திறம், மடன்மா கூறல் இவ்விரு துறைகளுக்குள்ள வேற்றுமைகளை விளக்குக.

3. மதியுடம்படுத்தலின் வகைகளை விளக்கி வரைக.

4. அலர் எங்கெங்கு நிகழும்? அதன் சிறப்பினை விளக்குக.

5. உள்ளுறை யாது? அதன் வகையினை விளக்கி வரைக.

(ஈ) 1. காலம் பற்றி விளக்குக.

2. குருத்துவம் என்பது யாது? அதன் விளக்கத்தினைத் தருக.

3 பாதிதம் என்பதன் மற்றொரு பெயர் யாது? அதன் பயன் யாது?

4. சமவாயம் பற்றி விளக்கி வரைக.

5. பிரமேயம் என்பது யாது? அது எத்தனை வகைத்து? அவை யாவை?

இலக்கியம்

காலம் - 3 மணி] [மதிப்பெண் - 100

(வினாக்கள் ஒத்த மதிப்பெண்களுடையன)

(அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக :—

1. திருநாவுக்கரசர் வரலாற்றில் திலகவதியார் பெறும் இடத்தைப் பெரியபுராணம் வழி நின்று மதிப்பிடுக.

2. கீழ்க்காணும் பதிகங்கள் எழுந்த சூழ்நிலையை வேண்டிய விளக்கந் தந்து விரிக்க.

   (i) 'கோவாய் முடுகி'
   (ii) 'மாதர் பிறைக்கண்ணியானை'
   (iii) 'வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி'

3. நாவரசரும் ஞானசம்பந்தரும் ஒருங்குடன் சென்று வணங்கிய திருப்பதிகளைச் சுட்டி, அவற்றுள் யாதானும் ஓரிடத்து நிகழ்ந்த வியத்தகு செயலை விளக்குக.

4. 'தாம் கருதியபடி திருவருள் பெறும் பொருட்டுத் திருமுன்பு உண்ணாவிரதங் கிடத்தலும் தொன்று தொட்டு நிகழும் நம் ஆன்றோர் வழக்கு'— பாடப் பகுதிகொண்டு இக் கருத்தை நிறுவுக.

5. 'அப்பர் புராணம்' துணைகொண்டு நாவரசர் காலத் தமிழகத்துச் சமயநிலை-மக்கள் உளப் பாங்கு - சமுதாய மரபுகள் இவற்றைத் தொகுத்தெழுதுக.

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக :—

1. 'தோடுடைய' என்று தொடங்கும் ஞானசம் பந்தர் தேவாரத் திருப்பாட்டின் எண்ணரிய பொருட் சிறப்பை நயந்தோன்ற விளக்கிக் காட்டுக.

2. திருஞான சம்பந்தர் மதுரையில் நிகழ்த்திய அற்புதங்களை முறைப்படத் தொகுத்து, அக் காலை எழுந்த தேவாரப் பதிகங்கள் யாவை என்பதையும் சுட்டுக.

3. ஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்களுள் எட்டு முதல் பதினொன்று வரை அமைந்த பாடல்கள் பெறும் சிறப்பிடத்தையும், அதற் கான காரணங்களையும் ஆராய்க.

4. சிறு குறிப்பெழுதுக :—
திருக்கடைக் காப்பு, பச்சைத் திருப்பதிகம், சற்புத்திர மார்க்கம், கோளறு பதிகம்.

5. பெரிய புராணத்துள் இடம்பெறும் தனி அடி யாருள், திருஞான சம்பந்தர் தேவாரத்துள் கிளந்தோதப் பெறுவோர் யாவர் என்பதைச் சுட்டி, சில அகச்சான்றுகள் தருக.

(இ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக :—

1. 'சங்கரா யார்கொலோ சதுரர்'
'எங்கெழிலென் ஞாயிறு'
இவ்விரு தொடர்களையும் இடஞ் சுட்டி விரித்து வேண்டிய விளக்கம் தருக.

2. திருவாசகத்தின் உள்ளுருக்குந் தன்மைக்குத் தக்கவிரு சான்று காட்டி, அதன்கண் அத் திறம் அமைந்து கிடத்தலை எடுத்துக் காட்டுக.

3. 'திருவெம்பாவை'ப் பாடல்கள் திருவாசகத் திற் பெறும் சிறப்பிடத்தைச் சான்று காட்டி நிறுவுக.

4. 'உம்பர்கட் கரசே; யொழிவற நிறைந்த
யோகமே; ஊத்தையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே;
செம்பொருள் துணிவே; சீருடைக் கழலே;
செல்வமே; சிவபெரு மானே;
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே'

உரையெழுதி விளக்கி, மணிவாசகரின் பக்தித் திறத்தை எடுத்துக்காட்டுக.

5. சிவபெருமான் உயிர்கள்பாட்டுக் கொண்டுள்ள பெருங்கருணைத் திறத்தைத் திருவாசகத் துணைகொண்டு விளக்குக.

(ஈ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக:—

1. "கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவா யிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத்
[தாடினையே"

என்ற காடநம்பி திருவிசைப்பாவின் உட் கருத்தைச் சுட்டி, இதன்கண் பேசப்பெறும் அடியார் சிறப்பினைச் சுருக்கித் தருக.

2. கருவூர்த் தேவரால் பாடப்பெற்ற பிற்காலச் சோழர் எடுப்பித்த திருக் கோயில்கள் யாவை? அவற்றிற்குரிய திருவிசைப்பாவுள் யாதானும் ஒன்றை எழுதி விளக்குக.

3. "திருப்பல்லாண்டு"—பெயர்க்காரணம், ஆசிரியர், பாடல்தொகை, பாடிய இடம் இவற்றை விளக்கி, ஒன்பதாம் திருமுறையுள் அதற் குரிய தனிச்சிறப்பை எடுத்துக் காட்டுக.

சாத்திரம்

காலம் - 3 மணி] [மதிப்பெண் - 100

குறிப்பு :—(*1*) எவையேனும் பத்து வினக்களுக்கு மட்டும் விடை தருக.

(2) எல்லா வினக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்" என்னும் சிவஞானபோத நூற்பாவினை எழுதி, அதற்குப் பதவுரையும் இலக்கணக் குறிப்புக் களும் தருக.

2. "உள்ளத்தே தோற்ற உயிரணையும்" (அல்லது) "மனமாதியால் உணர்தல் மன்னு புலன்கள்" எனவரும் சிவஞான போத வெண்பாவினை எழுதி, அதற்குப் பொழிப்புரை வரைக.

3. மெய்கண்டார் கூறும் உவமைகளுள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்கமும் எழுதுக.

4. இறைவனை இதய பங்கயத்திற் கண்டு வழிபடும் முறையினைச் சிவஞான போதம் எவ்வாறு விளக்கியுள்ளது?

5. யோக நூலார் கூறும் நான்கு வகைப் பாவனைகள் யாவை? மெய்கண்டார் அவற்றை எங்ஙனம் மறுக்கின்றார்?

6. சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதர் என்பவர் யார்? அவர்களைப் பற்றிய குறிப்பு எங்கு, ஏன் வந்துளது?

7. "மறையினால் அயனால் மாலால்" எனவரும் சித்தியார் செய்யுளுக்குச் சிவஞான முனிவர் கூறும் நுண்பொருட் டிறனைப் புலப்படுத்துக.

8. "ஆர்ப்பாய காயந்தன்னை ஆன்மா நின்று ஆட்டும்" வகையினைச் சிவஞான சித்தியார் எங்ஙனம் உருவகம் செய்துள்ளது?

9. ஆன்மாவுக்குச் சகல நிலையில் உள்ளனவும், கேவல நிலையில் இல்லாதனவும் ஆகிய செயல்கள் பத்து யாவை?

10. காணும் உபகாரம், காட்டும் உபகாரம் (அல்லது) பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் என்பவற்றின் இயல்பினை விவரிக்க.

11. "நிறுத்திடுவன் நினைந்தஉரு நிமலன் தானே" என்பதற்குச் சிவப்பிரகாசம் கூறும் ஆறு காரணங்கள் யாவை?

12. இறைவனே உலகுக்கு உபாதானம் என்பார் கொள்கையினைச் சிவப்பிரகாசம் எங்ஙனம் மறுக்கின்றது?

13. ஆணவமலம் என ஒன்றில்லை எனக் கூறும் அகப்புறச் சமயம் யாது? அதனை உமாபதிசிவம் மறுக்கும் முறையினை விளக்குக.

14. சங்கற்ப நிராகரணத்தின்கண் மறுக்கப்படும் கொள்கைகள் அனைத்தினையும் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றனைப் பற்றி மட்டும் விவரித்து எழுதுக.

15. மாயாவாதம் என்னும் கொள்கையையும், அதன் மறுப்பினையும் சுருக்கி வரைக.

உரைநடை

காலம் - 3 மணி]　　　　[மதிப்பெண் - 100

குறிப்பு :—(1) கீழ்வரும் வினாக்களுள் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் விடை தருக.

(2) எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. "சைவ சமயம் ஒன்றே எல்லாவற்றினும் சிறந்த உண்மை மதம்" என்பதனை மறைமலையடிகள் எங்ஙனம் நிலைநாட்டி யுள்ளார் ?

2. கடவுளுக்கு அருளுருவம் உண்டு என்பதனை நிலை நாட்டுக.

3. அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையை விளக்குக.

4. ஞானத்தின் வகைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? விளக்குக.

5. பதியும் ஆன்மாவும் சித்துப் பொருள்களாயினும், அவற்றிற்குள்ள வேறுபாடு என்ன? உதாரணத்துடன் விளக்குக.

6. பரமுத்தி, சீவன்முத்தி என்பன எவற்றிற்கு மேம் பட்டன? அவற்றின் விளக்கம் யாது?

7. திருக்குறள் ஒரு சைவ சித்தாந்த நூல் என்பதனை நான்கு காரணங்கள் காட்டி விளக்கு.

8. கண்ணப்ப நாயனர் புராணம் பற்றிய சூசனத்தில் காணப்பெறும் அன்புடைமை பற்றிய கருத்தைச் சுருக்கி வரைக.

9. மகேசுர பூசையின் சிறப்பை விளக்குக.

இளஞ் சைவப் புலவர் தேர்வு

இலக்கணம்

காலம் - 3 மணி] [மதிப்பெண் - 100

குறிப்பு :—(1) ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வோர் உட்பிரிவை விடுக.

(2) எல்லாக் கேள்விகளும் சமமான மதிப்பெண் பெறும்.

(அ) 1. நூற்கு உரிய அழகுகள் எவை?

2. நல்லாசிரியர்க்குரிய இலக்கணங்களை விளக்குக.

3. பெயர் எத்தனை வகைப்படும்? அவற்றுள் இடுகுறி, காரண வகைகளை உதாரணத்தோடு விளக்குக.

4. குற்றியலுகரமாவது யாது? அவற்றின் வகைகளை விளக்குக.

5. திரிசொல் எத்தனை வகைப்படும்? விளக்குக.

(ஆ) 1. ஆகுபெயர் ஆவன யாவை? அவை எத்தனை வகைப்படும்?

2. மூன்றும் வேற்றுமை உருபுகள் யாவை? அவ்வுருபுகளின் பொருளை விளக்குக.

3. குறிப்பு வினைச்சொல்லாவது யாது? உதாரணத்தோடு விளக்குக.

4. எச்சங்கள் எத்தனை வகைப்படும்? விளக்குக.

5. பின் வருவனவற்றுக்குப் புணர்ச்சி விதி காட்டுக: அவனேயழகன், அந்தணர் வாழி, புள்ளுக்கடிது, வண்டின் கால், கலசௌதனம்

(இ) 1. குளகம் என்ருல் என்ன? உதாரணத்தோடு விளக்குக.

2. தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பியப் பண்புகளைத் தொகுத்தெழுதுக.

3. தன்மைநவிற்சி அணியின் வகைகளை விளக்கி, அவற்றுள் ஒன்றினுக்கு உதாரணந் தருக.

4. உருவகவணி, முன்னவிலக்கணி—இவற்றுள் ஒன்றின் உட்பிரிவுகளைக் குறிப்பிட்டு, ஏதேனும் ஒன்றிற்கு உதாரணந் தருக.

5. இலேசவணி, சமாகிதவணி, விரோதவணி—இவற்றுள் இரண்டின் பொதுவியல்பை விளக்குக.

(ஈ) 1. பின்வரும் பாடலில் அமைந்துள்ள அணியை விளக்குக :—

நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும்
நிறையு நிலைதளரா நீர்மை—அறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து.

2. விபாவனையணி, முரண்வினைச் சிலேடையணி, சங்கீரணவணி — இவற்றுள் இரண்டினை விளக்குக.

3. அசை என்ருல் என்ன ? விளக்குக.

4. மூவசையால் வரும் சீர்களின் தளைகளை விளக்குக.

5. சிந்தடி, நெடிலடி—இவற்றைப்பற்றிக் குறிப்பெழுதுக.

(உ) 1. விளக்கந் தருக :—இயைபுத் தொடை, இரட்டைத் தொடை.

2. குறள் வெண்பா, இன்னிசை வெண்பா—இவைபற்றிக் குறிப்புக்கள் எழுதுக.

3. வெள்ளைச் செந்துறை—நேரிசை யாசிரியப்பா, அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா—இவற்றுள் இரண்டின் இலக்கணத்தை விளக்குக.

4. கட்டளைக் கலித்துறை இலக்கணத்தை விளக்குக.

5. பின்வரும் பாடல் எப்பாவினத்தைச் சேர்ந்தது என்பதனைச் சீர் பிரித்துக் காரணத்தோடு விளக்குக :—

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்றிரு வாலவா யான்றிரு
[நீறே.

இலக்கியம்

காலம் - 3 மணி] [மதிப்பெண் - 100

(அ) கீழ் வருவனவற்றுள் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக :— 40

1. திரு ஆவினன் குடியில் விளங்கிய முனிவர் தோற்றத்தினை விளக்கி வரைக. அத்தகைய முனிவர்களைத் தற்காலத்தில் காண இயலுமோ என்பதையும் குறிப்பிடுக.

2. புறப்பற்று அகப்பற்று ஆகிய இவைகளை விடுதல் பற்றியும் இவைகளை விடுதற்குரிய வழிகள் பற்றியும் வள்ளுவர் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

3. கந்தர் கலிவெண்பாவில் கூறப்பெற்றுள்ள முருகப்பெருமானின் தோற்றப் பொலிவினைப் புலப்படுத்துக.

4. ஈகை, ஒப்புரவு—இந்த இரண்டு அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களில் காணக் கிடக்கும் ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டுக.

5. சுந்தரர் தேவாரத்தின் வாயிலாக நாம் அறியக் கிடக்கும் சிவபெருமானின் சிறப்பியல்புகளும் குண நலன்களும் யாவை?

6. நாம் இறைவனை வழிபடும் முறைபற்றிச் சுந்தரர் கூறியவற்றைச் சுருக்கி வரைக.

(ஆ) கீழ் வருவனவற்றுள் மூன்று வினாக்களுக்கு விடை தருக :— *30*

1. குறமகளின் வெறியாட்டு, திருமுருகாற்றுப்படையில் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?

2. குமரகுருபரர் சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கந்தர் கலிவெண்பாவில் எவ்வாறு விளக்கி யுள்ளார்?

3. "நிலையாமை" என்ற அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

4. கந்தர் அனுபூதியில் அருணகிரிநாதர் முருகப் பெருமானை வேண்டிய வரங்கள் யாவை?

5. சுந்தரர் யாக்கை நிலையாமை பற்றி நமக்கு அறிவுறுத்தியவைகளைப் புலப்படுத்துக.

6. சுந்தரர் தேவாரத்திலிருந்து நிந்தாஸ்துதிக்கு இரு சான்றுகள் தந்து விளக்குக.

(இ) கீழ் வருவனவற்றுள் யாதானும் ஒன்றிற்குப் பரிமேலழகர் கூறியுள்ள விளக்கவுரையினை வரைக :— 6

1. பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும் மருளானும் மாணுப் பிறப்பு.

2. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரு நோய்.

(ஈ) கீழ் வரும் உவமைகளுள் எவையேனும் மூன்று எவைகளை விளக்க வந்தன? உவமப் பொருத்தத்தினையும் ஆராய்க. 9

1. வளியிடைத் தீயெழுதல்.

2. மருந்தாகித் தப்பா மரம்.

3. கழுதை குங்குமம் சுமத்தல்.

4. பரிதி பலவு மெழுந்து சுடர் பாலித்தல்.

5. கூத்தாட்டு அவைக் குழாம்.

(உ) கீழ் வருவனவற்றுள் மூன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் நயங்களையும் புலப்படுத்துக. 15

1. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர்.

2. கூற்றம் குதித்தலும் கைகூடும்.

3. நாமே னடவீர் னடவீ ரினியே.

4. அன்பினுடன் கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே.

5. ஓடு புனற்கரையாம் இளமை உறங்கி விழித்தா லொக்கும் இப்பிறவி.

சாத்திரம்

காலம் - 3 மணி] [மதிப்பெண் - 100

குறிப்பு :—(1) எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

(2) எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. உங்கட்குப் பாடமாக அமைந்துள்ள ஐந்து நூல்களின் பெயர்க் காரணங்களையும், அவற்றின் ஆசிரியர்களின் வரலாற்றையும் சுருக்கமாக வரைக.

2. 'கண்டத்தைக் கொண்டு', 'மூலை யிருந்தாரை', 'கிடந்த கிழவியை' என்று துவங்கும் செய்யுட்களை எழுதி, அவற்றிற்குப் பொழிப்புரை கூறி, அச் செய்யுட்கள் எவ்வெக் கருத்துக்களை விளக்க வந்தன என்பதைத் தெளிவுபடுத்துக.

3. உய்யவந்த தேவ நாயனார் உயிரைப் பெண் என்று குறித்தது எந்தப் பாடலில்? ஏன்? இங்ஙனம் கூறுவது நால்வகை நெறியுள் எதனுள் அடங்கும்? அதனை மேற்கொண்டொழுகிய சைவ சமயாசாரியார் யார்?

4. திருக்களிற்றுப்படியார் கூறும் மெல்வினை வல்வினைகள் யாவை? வல்வினைக்கு அவர் மேற்கோளாகக் கூறியவற்றுள் இரண்டினைச் சுட்டி விளக்குக.

5. 'துரியங் கடந்த' என்னும் செய்யுளின் கருத்து யாது? இதனை விளக்க மேற்கோளாகக் கூறப் பெற்றன யாவை? விளக்குக.

6. உண்மை விளக்கத்திற் கூறப்பெற்ற பஞ்சாக்கர நடனத்தைச் சுருக்கி வரைக.

7. "முத்திதனில் மூன்றும்" என்னும் பாடலை எழுதி அதன் பொருளை விளக்குக.

8. "அருளுரு நிலை" என்னுந் தலைப்பின் கீழ் திருவருட் பயன் விளக்குங் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

9. இன்புறு நிலைபற்றித் திருவருட் பயன் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

10. "அஞ்செழுத்தும்" என்று துவங்கும் வெண்பாவை எழுதி அதற்கு விளக்கம் தருக.

11. "அருவேல் உருவன்று" என்னும் வெண்பாவை எழுதிப் பொழிப்புரையுங் கருத்துரையுங் கூறுக.

12. திருவுந்தியாரைத் தழுவித் திருக்களிற்றுப்படியார் பாடப்பெற்றுள்ளது என்பதனை ஒரு காட்டுத் தந்து விளக்குக.

உரைநடை

காலம் - 3 மணி] [மதிப்பெண் - 100

குறிப்பு :—(1) வினாக்கள் ஒத்த மதிப்பெண்கள் உடையன.

(.) விடைகள் கட்டுரை வடிவில் இரண்டு பக்க அளவில் அமைதல் வேண்டும்.

1. 'தத்தா நமர்' என்று வீழ்ந்த பெரிய புராண அடியாரின் பேரன்பின் திறத்தை நாவலர் நடையை யொட்டி விரித்தெழுதுக.

அல்லது

மும்மையால் உலகாண்ட சருக்கத்தில் இடம் பெற்ற தனியடியார்களைச் சுட்டி அவருள் ஒருவர் தம் வரலாற்றைப் பெரியபுராண நெறிநின்று விரிக்க.

2. 'பழியஞ்சிச் சொக்கர்' என்ற பெயர்க் காரணத்தைத் திருவிளையாடல் புராணத்தின் துணைகொண்டு சுவைபடப் புனைக.

அல்லது

'நான்மாடக் கூடல்', 'திருவாலவாய்' என்ற பெயர்கள் மதுரைக்கு எய்திய வரலாற்றைச் சுருக்கித் தருக.

3. தாயுமான சுவாமிகள் வரலாற் ஞராய்ச்சியால் பெறப்படும் முடிபுகளாகத் திரு. கா. சு பிள்ளையவர்கள் சுட்டுவன யாவை?

அல்லது

'உயிரின் இயல்பு' பற்றிய தாயுமானர் கருத்தை அகச்சான்று கொண்டு நிறுவுக.

4. மெய்கண்ட சாத்திரம் அறிவுறுத்தும் பொருளுண்மைகளாகத் திரு. வி. க. அவர்கள் எடுத்தியம்புவன யாவை?

அல்லது

சைவ சமயம் உலகெலாம் பரவ நாம் மேற்கொள்ளவேண்டிய முன்னணி வேலைகளாகத் திரு வி. க. அவர்கள் குறிப்பிடுவன யாவை?

5. 'அப்பரடிகள் வாழ்வியலில் திருவருள் வெளிப்பாடு' என்ற தலைப்பின்கீழ் சிவக்கவிமணி அவர்கள் கருத்தைத் தொகுக்க.

அல்லது

திருக்கயிலாய யாத்திரையில் நாவரசர்காட்டிய உறுதியும், எய்திய வெற்றியும் பற்றிய நிகழ்ச்சிகளைப் புனைக.

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

மார்கழித் திங்கள் சிறப்பு நாள்கள்

7	(21-12-68)	பூராடம்—சாக்கிய நாயனர் விழா
13	(27-12-68)	இரேவதி—வாயிலார் நாயனர் விழா
20	(3- 1-69)	திருவாதிரை—சடைய நாயனர் விழா
	do	திருவாதிரை விழா
26	(9- 1-69)	உத்தரம்—இயற்பகை நாயனர் விழா
29	(12- 1-69)	சுவாதி—மானக்கஞ்சாற நாயனர் விழா

பிறசெய்திகள்

புரசைத் திருநெறிக் கழகச் சார்பில் 7-11-68 மாலை 93ஆம் திங்கள் வழிபாடு சென்னை சைதாப் பேட்டை பிராமணத் தெரு ஸ்ரீ சவுந்தரேசுரர் திருக்கோயிலில் சிறப்புற நிகழ்ந்தது. உழவாரப்பணியும் நடைபெற்றது.

சென்னை குயப்பேட்டை சண்முகஞானபுரம் தமிழ் வேதபாராயண பக்த ஜனசபையின் 56ஆம் ஆண்டு திருநெறித் தமிழ் வேதத் திருமுறை விழா 17-11-68 முதல் 24-11-68 முடிய சிறப்புற நிகழ்ந்தது.

திருச்சி மாவட்டம் செட்டிகுளம் சிவநெறி வார வழிபாட்டுக் கழகச் சார்பில் வெள்ளிக்கிழமைதோறும் கூட்டு வழிபாடும் சமயச் சொற்பொழிவும் நிகழ்ந்து வருகின்றன. 4-12-68 புதன் மாலையில் செட்டிகுளம் ஏகாமபரேச்சுரர் ஆலயத்தில் திரு. ஜி. சுப்புராமன் அவர்கள் தலைமையில் பல சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையின் 83ஆம் ஆண்டு நிறைவுவிழா திருச்சி மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் திரு. T. M. நாரயணசாமி பிள்ளை எம். ஏ., பி. எல். அவர்கள் தொடங்கிவைக்க திருமுருககிருபானந்தவாரி அவர்கள் தலைமையில் 8-12-68 அன்று நிகழ்ந்தது. அருள்திரு. தத்புருஷ தேசிகர், வித்துவான் திரு. அ. நடேச முதலியார் ஆகியோர் முறையே முறையே சைவ சித்தாந்தம், திருமுறை வாழ்வு என்பனபற்றிப் பேசினர்.

கும்பகோணம் பெரிய மடம் சிவப்பிரகாசர் செந்தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 8-12-68 மாலை திரு. ஆ. சாமி

[illegible] அவர்கள் திரு. [illegible] R. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் "திருமுருகாற்றுப்படை" என்பது பற்றி விரிவுரையாற்றினார்கள்.

[illegible] திரு. T. S. சிவப்பிரகாச முதலியார் அவர்கள் சைதாப்பேட்டையில் இவ்வுலகினின்றும் 7-11-68ல் மறைந்தது குறித்து நம் சமாஜத்தின் வருத்தத்தை அன்னார் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் ஆன்மா இறைவன் திருவடியின்புற்றிருக்க அவன் அருள்பாலிக்க வாழ்த்தி வணங்குகின்றோம்.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர்கள் தங்கள் சந்தாத்தொகை ரூபாய் ஐந்தினையும் 31-12-63க்குள் சமாஜ முகவரிக்குச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனபதைத் தெரிவித்துககொளகின்றோம் மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோா 1. தங்கள் முழுப் பெயர், 2. சந்தா எண் 3. தெளிவான முகவரி, 4. மாவட்டம் ஆகியவற்றை நன்கு குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் அரசியலார் இசைவு பெற்று தங்கள் சந்தாத் தொகையினை விரைவில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை "திரு. சுந்தரம், செயலாளர், மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம், 163, ஜலன்பந்தர், குலாலம்பூர்" என்னும் முகவரிக்குச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கினேறோம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர்,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழமாட வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.